# திசை

THISAI

திசை 1 | 22-9-1989 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 4-00 | முகம் 37

உள்ளே....


- ராஜீவ் அரசாங்கம் — சில குறிப்புகள்
- கொத்தலாவலை கால உள்நாட்டுக் குழப்பம்
- பிரஜா உரிமை ஒரு அடிப்படை மனித உரிமை
- கந்தரோடையின் வரலாற்று முக்கியத்துவம்
- மீண்டும் பெக்கர், கிராவ் ரென்னிஸ் சம்பியன்கள
- மூன்ரும் பரிசுச் சிறுகதை
- நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர்
- தூவானம்; சிந்தனைமேடை; நெளிவு சுழிவு.


# தாக்கினல் பதில் தாக்குதல்

## — அமைதிப்படை, விடுதலைப் புலிகள்

**இலங்கை - இந்திய அரசுகளுக்கு இடையில் திங்களன்று நிகழ்ந்த உடன்பாட்டின்படி வடக்கு - கிழக்கில் அமைதிப்படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த யுத்த நிறுத்தத்திற்குச் சம்மதம் தெரிவித்து விடுதலைப் புலிகளும் புதனன்று ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.**

ஆனல் யுத்த நிறுத்தம் பற்றி அமைதிப்படை, புலிகள் ஆகிய இருதரப்பினரதும் அறிக்கைகளில் பின்வருமாறு ஒரு விடயம் கூறப்படுகிறது. அதாவது ''தாக்கினல் திரும்பத் தாக்குவோம்'' என்பதாகும்.

திம்புப் பேச்சு வார்த்தையின் போது ஒரு போர் நிறுத்தம், 1987 இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் போது ஒரு போர் நிறுத்தம், அப்படியே இப்போதும் ஒரு போர் நிறுத்தம். முதலில் வந்த போர் நிறுத்தங்கள் பயனளிக்காது போயின. ஆனல் இப்போர் நிறுத்தமும் அவ்வாறு போகாது பயனளிக்க வேண்டுமானல் உண்மையான தீர்வைக் காண சகலரும் முன்வரவேண்டும்.

1987 ஆம் ஆண்டு ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதில் பிரச்சினைக்கு உரியவர்கள் கைச்சாத்திடாது இரு அரசுகளே கைச்சாத்திட்டன. இப்போது ஓர் உடன்பாடு காணப்பட்டுள்ளது. அதிலும் பிரச்சினைக்குரியவர்கள் சம்பந்தப்படாது இரு அரசுகளே கைச்சாத்திட்டுள்ளன. புலிகளை வழிக்குக் கொண்டு வருமாறு 1987ஆம் ஆண்டு இந்திய அரசிடம் இலங்கை ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன கோரினர்; இன்று, புலிகளை வழிக்குக் கொண்டு வருமாறு இலங்கை ஜனதிபதி பிரேமாவிடம் இந்திய அரசு கோருகிறது. வரலாறு எப்படி மாறியுள்ளது!

1987ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற் கூறப்பட்டவாறு — சகல போராளிகளுக்கும் பொது மன்னிப்பு என்ற விதிகளின்படி - அரசியல் கைதிகளை விடுதலை செய்யாது, ஜே.ஆர். ஒப்பந்தத்தை மீறினர். புதிதாகவும் கைதுகளும் மரணங்களும் நிகழ்ந்தன. ஒப்பந்தத்தை மீறி ஜே. ஆர். குடியேற்றங்களைச் செய்தார். இவ்வாருன நடவடிக்கைகளினல் படிப்படியாக ஒப்பந்தத்தின் மீது அதிருப்தி வளர்ந்து, இறுதியில் ஒரு பெரும் யுத்தமே வெடித்தது, இரண்டு ஆண்டுகளாகத் தமிழ் பேசும் மக்கள் பெரும் துயரங்களை அனுபவித்தனர். ஒப்பந்தத்தைச் சரிவர நடைமுறைப்படுத்துமாறு அப்போதைய இந்தியத் தூதர் ஜே. என். தீக்ஷித் ஜே. ஆரை போதியளவு வற்புறுத்தியதாகத் தெரியவில்லை. இப்போது பெரும் அனுபவம் எல்லோருக்கும் ஏற்பட்டுள்ளது. எனவே

(12ஆம் பக்கம் பார்க்க)

## படைவிலகல் — தமிழ் மக்களின் பாதுகாப்பில்!

1987 ஆம் ஆண்டு இலங்கை —இந்திய ஒப்பந்கத்தின் பிரகாரம் தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, இந்திய அரசுக்கு உண்டு. எனவே, தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் ஏற்பட்டாற்தான் படையை முற்ருக விலக்கிக் கொள்வது சாத்தியமாகும் என்று, ராஜீவ் காந்தி செவ்வாய்க் கிழமை, தமது இராணுவத் தளபதிகள் மத்தியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

## சீனிக் களஞ்சியங்கள் முன் மறியல் போராட்டம்

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு, ராஜீவ் அரசாங்கம் அதிகப்படியான சீனியை இறக்குமதி செய்து, குறைந்த விலையில் அதை மக்களுக்கு வழங்கவிருப்பதாக, இந்திய எதிர்க்கட்சித் தலைவரான வி.பி.சிங் ராஜீவ்காந்திமீது குற்றஞ் சுமத்தியுள்ளார்.

இந்தச் சீனி விலை குறைப்பு ஒரு தேர்தல் தந்திரமென்றும், இதனை எதிர்த்து இந்தியாவிலுள்ள சகல சீனிக் களஞ்சியங்களுக்கு முன்னல் மறியல் போராட்டத்தைத் தாம் செய்யப்போவதாகவும், வி. பி. சிங் அறிவித்துள்ளார்.

## பெரெஸ்ரோய்க்கா புதிய அணுகுமுறை

— மேர்வின் டி சில்வா

"நாம் இருபத்தியொன்ரும் நூற்ருண்டிற்குள் பிரவேசிக்கும் தறுவாயில், அதிகாரத்தின் தன்மையில் மாற்றங்கள் ஏற்படுவதைப் பார்க்கிரேம். மாபெரும் வல்லரசுகள் என்ற கருத்தில் மாற்றமேற்பட்டுள்ளது. முன்னர் அமெரிக்காவையும் சோவியத் யூனியனையும் கொண்ட இரு துருவ உலகத்திற்குப் பதிலாக பல மையங்களைக் கொண்ட பல துருவங்களைக்கொண்ட உலகம் தோன்றும் போக்கைப் பார்க்கிரேம். அதிகாரத்தின் தன்மையில் மாத்திரமல்ல மாற்றம் ஏற்பட்டு வருகிறது. அதன் பரிவர்த்தனையிலும் மாற்றம் ஏற்பட்டு வருகின்றது. ஆகவேதான், இருபத்தியொன்ரும் நூற்ருண்டைப் புதிய முறையில் அணுகும் கொர்பச்சேவ் சிந்தனைக்கு ஆதரவு திரள்கிறது. எமது சூழல் பதற்றம் குறைந்ததாக மாறுகிறது. கெடுபிடிப் போர் விபத்தின் போட்டிகள் குறைந்து வருகின்றன. வல்லரசுகளுக்கிடையில் போட்டா போட்டிகள் ஏற்படும்போது எமது மூன்ரும உலக நாடுகளின் பிரச்சினைகள் மேலும் சிக்கலடைகின்றன. ஆகவே, இன்று சர்வதேச அரங்கில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை நாம் நிச்சயமாக ஆதரிக்க வேண்டும்''. இவ்வாறு லங்கா கார்டியன் பத்திரிகை ஆசிரியர் மேர்வின் டி. சில்வா 'பெரெஸ்ரோய்க்கா ஆய்வு வட்டம்' நடத்திய கூட்டத்தில் கூறினர்.

## கொழும்புச் செய்தி

— யாழ் குருவி —

### ஜே. வி. பி. — அரசு கயிறிழுப்புப் போட்டி

சட்டமறுப்பு நடவடிக்கைகளில் பங்கு பற்றுமாறும், அரசுக்கு எதிரான ஊர்வலங்களில் கலந்து கொள்ளுமாறும் ஜே. வி. பி. மக்களை நிர்ப்பந்திக்கின்றது. அதேவேளை அதே மக்களை ஜே. வி. பி. க்கு எதிராக ஊர்வலம் நடத்துமாறு அரசு நிர்ப்பந்திக்கின்றது. மக்கள் சக்தி மாபெரும் சக்தி என்று கூறியவர்களெல்லாம் இன்று, மக்களைச் சக்தியற்ற பகடைகளாக்கி விட்டனர் போல் தெரிகிறது.

பஸ் கட்டணம் அறவிடக் கூடாதென்று பஸ் நடத்துனரை ஜே. வி. பி. நிர்ப்பந்திக்கின்றது. அதேவேளை பஸ் கட்டணம் அறவிடாத நடாத்துனர் மீது அரசு நடவடிக்கை எடுக்கின்றது. அரசுக்கும் இராணுவத்துக்கும் எதிரான சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு, இராணுவ முகாம்களை நோக்கி ஊர்வலம் நடத்துமாறு, ஜே. வி. பி. மக்களை நிர்ப்பந்திக்கிறது. அவ்வாறு ஊர்வலம் செல்லும் மக்கள் ஏந்திச் செல்லும் சுலோக அட்டைகளை இராணுவம் பறித்துவிட்டு, ஜே.வி. பிக்கு எதிராகத் தாம் தயாரித்து வைத்துள்ள சுலோக அட்டைகளைக் கொடுத்து, ஊர்வலம் போகுமாறு நிர்ப்பந்திக்கின்றது. இரு பக்கமும் மக்கள் படும்பாடு!

## மக்களா மாக்களா?

மக்கள் தம் உணர்வுகளால் உந்தப்பட்டு சுயமாகக் கிளர்ச்சியில் ஈடுபடுவதே உண்மையான புரட்சியாகும். மாருக ஆயுதமுனையிலான நிர்ப்பந்தத்தின் பெயரில் மக்களைக் கிளர்ச்சிக்கு நிர்ப்பந்தித்தால் அதனை அரசு மக்கள் ஆதரவற்ற கிளர்ச்சி என்று வர்ணித்து, மேலும் மேலும் இராணுவ நடவடிக்கைகளைச் செய்வதற்கான பிரச்சார- பலத்தைப் பெற்றுவிடும்.

மொத்தமாகப் பார்த்தால் இரு பக்க ஆயுதங்களுக்கிடையில் மக்கள் நசிகிருர்கள். மக்கள் புரட்சி என்ருல் என்ன என்பதைப் பற்றி இந்த அரசியல்வாதிகள், வரலாற்றிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ள மாட்டார்களா!

ஈரானில் 1979ஆம் ஆண்டு மக்கள் புரட்சி வெடித்தபோது இராணுவம் செயலற்று, மக்கள் பக்கம் திரும்பிய உதாரணத்தை இலங்கையிலுள்ள சகல அரசியல்வாதிகளும், ஒரு கணம் திரும்பிப் பார்க்கக் கூடாதா?

## மனித உரிமை வழக்கறிஞர் ஆபத்தில்

அவசரகாலச் சட்டத்தின்கீழ் புதிதாக ராணுவத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் யாவும் சித்திரவதைகள், கொலைகள், காணுமல்போதல் போன்றவற்றிற்குச் சார்பாக உள்ளனவென்றும், இவற்றை நீக்கி மனித உயிர்கள் மதிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை ஜனதிபதி பிரேமதாஸவுக்கு அண்மையில் எழுதிய கடிதத்தில், குறிப்பிட்டுள்ளது.

மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்குத் தோற்றிய வழக்கறிஞர் 'சரித லங்காபுர' படுகொலை செய்யப்பட்டது தொடர்பாகவும், தற்போது அவரைப்போலவே மனித உரிமை வழக்குகளில் வாதாடிவரும் சட்டத்தரணியான பிறின்ஸ் குணசேகர, போன்ரேரின் உயிருக்கும் ஆபத்து நேரலாம் எனவும் மேலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'சற்றடே றிவியூ'வின் சகோதர வாரப் பத்திரிகை

**திசை**
THISAI

ஆசிரியர்!
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்!
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்–ரூபா! 225/-
அரைவருடம்–ரூபா! 115/-

இந்தியா
ஒரு வருடம்–ரூபா: 300/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி :

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.


Persons living abroad who are desirous of subscribing to the "THISAI" are kindly invited to place their subscriptions with the Circulation Manager, New Era Publications Ltd., 118, 4th Cross Street, Jaffna, Sri Lanka and not with any distributor or Agent.

Governing Councillor
New Era Publications Ltd.

# அநியாயங்களுக்கு எதிராக நடவடிக்கைஎடுக்கப்படுமா?

திசை 18-8-1989 இதழின் 'இணைதல்' பகுதியில் நெல்லியடிப் பகுதியில் தனியார் கல்வி நிலையமொன்றின் அநியாயங்கள் பற்றி பொ. தேவகுமார் அவர்கள் வரைந்த கடிதம் தொடர்பாக மேலும் சில உண்மைகளையும் கருத்துக்களையும் முன்வைக்குமுகமாக இச்கடிதம் எழுதப்படுகிறது.

குறிப்பிட்ட கல்வி நிலையத்தில் உண்மைகளை வெளிக்கொணர விரும்பும் தேவகுமாரைப்போன்ற மாணவர்கள் தொடர்ந்தும் கல்வி கற்பது முடியாத காரியம். அப்படிக் கற்பதானால்தேவகுமார்போன்றோர் மிருகங்களைவிடக் கேவலமாக நடத்தப்படுவர். தங்களை அறிவாளிகள் எனக் கூறிக்கொள்ளும் கல்வி வாசனையே அறியாத நிர்வாகிகள், மாணவர்களை மிருகங்களைவிடக் கேவலமாக மதித்து, அவர்கள் மீது அடாவடிகளைக் கட்டவிழ்த்து விடுவதும் பலர் முன்னிலையிற் தகாதவார்த்தைகளால் ஏசுவதும் இங்கு சகஜம்.


இக் கல்வி நிலையம் ஒழுக்கச் சீர்கேடுகளுக்கும் உச்சக்கட்டமாய் விளங்குகிறது. இதற்குக் கடந்த காலங்களில் நடந்த சம்பவங்கள் சான்றுபகரும். இதைத் தட்டிக்கேட்ட மாணவர்கள் பலர் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு வெளியேற்றப் பட்டார்கள்.

இங்கு கல்வியை விடப் பணமே முக்கியத்துவம் பெறுகிறது. இங்கு காணப்படுவது போல் உயர்ந்த கட்டணம் வேறு எங்கும் காணப்படுவதில்லை.

அண்மையில் யாழ். நகரில் தனியார் கல்வி நிலையங்கள் ஒன்றிணைந்து சங்கம் ஒன்றை அமைத்ததாகப் பத்திரிகை வாயிலாக அறிய முடிந்தது. மேற்குறிப்பிட்ட சங்கமாவது குறிப்பிட்ட கல்வி நிலையத்தின் அநியாயங்கள் பற்றிச் சற்றுச் சிந்தித்துத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுமா?

'திசை' — ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைக்காகக் குரல் எழுப்பும் ஒரு பத்திரிகை என்ற ரீதியில் மாணவ சமுதாயத்தின் சார்பில் எழும் இவ் அவலக் குரலைக் கருத்திற்கொண்டு, இக்கடிதத்தைப் பிரசுரிக்கும் என நம்புகிறேன்.

ஜெயக்கொடி, பார்த்தீபன்
கரவெட்டி.




## ஒரு சிறந்த களம்

வெளியூர்ப் பயணம், நாட்டுநிலை, சுகவீனம் போன்ற காரணங்களால் இக்கடிதம் சுணங்கியே எழுதப்படுகிறது — துயரத்துடன்.

சிறுகதைப் போட்டியில் எனக்குமொரு பரிசு கிடைத்திருப்பது குறித்து மிக மகிழ்கிறேன். 'பரிசோதனைக்குத் திசை ஒரு சிறந்த களம்' என்று தெளிவத்தை கூறியதை, எனக்குப் பரிசு கிடைத்தமையும் உறுதிப்படுத்துகிறது. நன்றி. யாழ்ப்பாணம் வரக் கிடைத்த அருமையான ஒரு சூழ்நிலை கைநழுவியது குறித்து இன்னும் கவலைதான்.

ஸ்ரீதரனின் சொர்க்கம் ஒரு வித்தியாசமான படைப்பு. புதுக்கவிதை வாசித்த மாதிரியான நிறைவு. வெளிவந்த இரண்டு விமர்சனங்களும் பூரணப்படவில்லை. எனக்கும் எழுத நேரமில்லை. சித்திரங்கள் நன்றாகத்தான் இருந்தன. நீக்ரோக்களை உவமிப்பதாக வந்த விமர்சனம் எனக்குக் குறுகிய வட்டத்தை நினைவுறுத்தியது; ஏனென்றால் 'சொர்க்கம்' எந்த நாட்டுக்கும் சரிவரக்கூடிய ஒரு கதை. இலங்கையொரு நீக்ரோ நாடாக ஏன் இருக்கக்கூடாது? நமக்கும் நீக்ரோக்களுக்கும் என்ன வித்தியாசம்? விமர்சனக்காரர் இதைப் பார்த்துச் சிரிக்கவும் கூடும். சொர்க்கத்தின் சுருக்கம் இதுதான்: சொர்க்கத்திற்கு வழி காட்டுவோர்; சொர்க்கத்திற்கு வழி காட்டப்படுவோர். இருவரும் இருவேறு சிந்தனை கொண்டவர்கள். வழிகாட்டுபவரும், வழிகாட்டப்பட வேண்டியவரே. வழிகாட்டப்படுவோர் சொர்க்கத்துக்குப் போகத் துணியாவிட்டால், guide மாத்திரம் எப்படிப் போகப் போகிறார்?

நேற்றுக்கூட நான் தெளிவத்தை வீட்டுக்குப்போகும் போது இந்தச் 'சொர்க்க' வழியாக ஸ்ரீதரனை நினைத்துக் கொண்டு போனேன்!

அல் அஸூமத்
ராகமம்.

## இதய மகிழ்ச்சி

திசையின் பணி திசையெங்கும் வியாபித்திருக்கின்றது. நன்றி. மலையகத் திசையின் பிரச்சினைகளையும் உலக திசையெங்கும் உணர்த்தி வரும் உங்கள் நடவடிக்கையால் எங்கள் இதய தசையெல்லாம் மகிழ்கின்றது.

ஏ.செல்வராஜ்
கண்டி.

## விநியோகத்தைத் துரிதப்படுத்தவும்

இன்று (5. 9. 89) கண்டியில் போய் விசாரித்தால் 18 – 8 – 89 'திசை' தான் கிடைத்தது. 'திசை' உடனுக்குடன் கிடைப்பதில்லை.

விநியோகத்தைத் துரிதப் படுத்துவது பத்திரிகை விற்பனையைக் கூட்டுமல்லவா?

உஸ்மான் மரிக்கார்
மடிகே.

## அமைதி வந்தது

வட–கிழக்கு மாகாணத்திலுள்ள இந்திய அமைதிப் படையின் போர் நிறுத்த அறிவிப்பு புதன் காலை 6 மணியுடன் நடைமுறைக்கு வந்ததோடு, யாழ் பெரியகடைப் பகுதியிலுள்ள வியாபார நிலையங்கள் கலகலப்பாகக் காணப்பட்டன. பஸ் நிலையத்திலும் பிரயாணிகள் வழமைக்கு மாறாக அதிகமாகவே காணப்பட்டனர். இந்திய அமைதிப் படையின் போர் நிறுத்த அறிவிப்புக்கு முன்னமே ஒப்பந்தம் கைச்சாத்தாகியதும் செவ்வாய் அன்று மாலையே, பெரிய கடைப் பகுதியில் போக்குவரத்து அதிகரித்துக் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# மன்னார் நகர்ப்பகுதி விளக்குகள் விழித்துவிட்டன

மன்னார் நகர்ப் பகுதிக்குள், மின்சார சபையினால் கைவிடப்பட்டு, தெருவோரங்களில் தூங்கி வழிந்துகொண்டிருந்த மின் கம்பங்கள், தமது மின் குமிழ்களையும் களவு கொடுத்துவிட்டு மூளிகளாய் நீண்டகாலமாய் நின்றுகொண்டிருந்தன. தற்போது, கைவிட்டுப்போன மச்சான் திரும்பி வந்து அவற்றுக்கு புது அலங்காரம் பண்ணி கைப் பிடித்துக்கொண்டு விட்டார். தூங்கி வழிந்த மின் கம்பங்கள் திடீரென்று துயிலெழுந்து நகர்த் தெருக்களுக்கு வெளிச்சம் தரக் காரணமென்ன?

மின்சாரசபை ஊழியர்களுடன் தொடர்புள்ள வட்டாரங்களிலிருந்து கிடைத்த தகவல் : அமைதிப் படையினரால் விடுக்கப்பட்ட பணிப்பின் பேரிலேயே மின்சார சபை இந்த அவசர நடவடிக்கையை மேற்கொண்டதாம். பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டே, மன்னார் நகர்ப் பகுதிக்குள் இருளில் மூழ்கிக் கிடந்த சில குறிப்பிட்ட பகுதிகள் தற்போது வெளிச்சத்தைக் கண்டுள்ளன என்றும் அறிய வந்துள்ளது.


திக்கெட்டும்
'திசை' வளர வாழ்த்துகிறோம்

சிவகுமார் ஸ்ரோர்ஸ்
(உரிமை : எஸ். நமசிவாயம்)

மொத்த வியாபாரிகளும்,
கமிஷன் ஏஜென்டுகளும்

282, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7787
A-20

செல்வம்ஸ்

மோட்டார் சைக்கிள்கள், உதிரிப்பாகங்கள்
பற்றறிகள், ரயர்கள்

இறக்குமதியாளரும் விற்பனையாளரும்

443, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
உரிமை: எஸ்.செல்வநாயகம் தொலைபேசி: 23740
A-18

நங்கை — மாதர் சஞ்சிகை
மகளிர் அபிவிருத்தி நிலையத்தால்
வெளியிடப்படும் நங்கை — மாதர் சஞ்சிகை
சில தினங்களில் வெளிவரவுள்ளது.
பெரிதும் நங்கையரே படைத்திட்ட
கலை, இலக்கிய, ஆய்வு விடயங்களைத் தாங்கி
வெளிவரும் ஓர்
ஈழத்து முன்னணிச் சஞ்சிகை!

தொடர்புகள்:
ஆசிரியர் — 'நங்கை'
7, இரத்தினம் ஒழுங்கை,
கே. கே. எஸ். வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
A-19

# கொத்தலாவலை கால உள்நாட்டுக் குழப்பம்

சுதேசி

சேர் ஜோன் கொத்தலாவலை 1953 ஆம் ஆண்டு தொடக்கம் 1956 ஆம் ஆண்டு வரை பிரதம மந்திரியாக இருந்தார். 1947 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சி ஸ்தாபிக்கப்பட்ட பின்பு, அதன் தலைவராக டி. எஸ். சேனநாயக்காவும், அடுத்த தலைவராக வரக் கூடிய நிலையில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவும் இருந்தார். அடுத்து முக்கிய தலைவர்களாக ஜோன் கொத்தலாவலை ஜே. ஆர். ஜெயவர்த்தன, டட்லி சேனநாயக்கா போன்றோர் இருந்தனர்.

கட்சிக்குள் பண்டாரநாயக்காவின் தலைமையை வீழ்த்துவதற்கு கொத்தலாவலை தலைமையில் டட்லி, ஜே. ஆர். போன்றோரை இணைத்து ஓர் அணியை டி எஸ். வளர்த்தார். இதனால் ஐ. தே. க. யில் அடுத்த தலைமைத்துவமோ, பிரதமர் பதவியோ தனக்குக் கிடையாதென்பதை உணர்ந்த பண்டாரநாயக்கா 1950 ஆம் ஆண்டு ஐ. தே. கவை விட்டு வெளியேறி புதிய கட்சி அமைத்தார்.

பண்டாரநாயக்கா கட்சியை விட்டு வெளியேறியதும் டி. எஸ் தனது மகன் டட்லியை அடுத்த பிரதமர் ஸ்தானத்திற்கு கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இலங்கை சுதந்திரமடையும் காலத்தில் பிரித்தானியாவிற்கும், டி. எஸ். சிற்கும் இடையில் சில இரகசிய உடன்பாடுகள் இருந்தன. இதனால் டி. எஸ் பிரித்தானியாவின் விசுவாசியானார். எனவே டி. எஸ். இன் சிலவிருப்பங்களை நிறைவேற்ற பிரித்தானியாவும் தயாராக இருந்தது. இதனைப் பயன்படுத்தி தான் இல்லாத காலத்தில் தனது மகன் டட்லியை பிரதமராக்குமாறு அப்போதைய இலங்கைக்கான மகா தேசாதிபதியாக இருந்த சோல்பரி பிரபுவிடம் டி. எஸ். கேட்டிருந்தார்.

ஆனால் திடீரென டி எஸ். 1952 இல் காலமானார். அப்போது சோல்பரி விடுமுறையில் இங்கிலாந்து சென்றிருந்தார். உடனடியாகத் தனது விடுமுறையை இரத்துச்செய்துவிட்டு சோல்பரி இலங்கை திரும்பினார். சோல்பரி இலங்கை வந்ததும் தன்னைத்தான் பிரதமராக நியமிப்பார் என கொத்தலாவலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் சோல்பரி டட்லியை நியமித்தார். இதனால் கொத்தலாவலை பெரிதும் கொதிப்படைந்து, டி. எஸ். குடும்பத்தின் செயல்களைக் கண்டிக்கும் ஒரு கைநூலை பெயர்போடாது வெளியிட்டார். டட்லியின் மந்திரிசபையில் ஓர் அமைச்சராக இருந்துகொண்டு இவ்வாறு கொத்தலாவலை செயற்பட்டார். கொத்தலாவலைதான் இந்த நூலை வெளியிட்டாரென்பதை டட்லி அறிந்திருந்தபோதிலும் அவரால் கொத்தலாவலைக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்க முடியவில்லை.

இதன் பின்பு 1953 ஆம் ஆண்டு ஹர்த்தாலால் டட்லி தனது பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்தார். கொத்தலாவலை பிரதமரானார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# மனிதநேயத்தைக் கேலி செய்யும் சடங்குகள்

சு. வில்வரத்தினம்

மதிப்புக்குரிய மயிலங்கூடலூர் நடராசன் அவர்கள் எனது கருத்துக்கள் தொடர்பான தனது எதிர்வினையை 25. 8. 89 திசையில் வெளிப்படுத்தியிருந்தார். கிணற்றில் போட்ட கல்லாக இல்லாமல் கருத்துக்கள் எதிர்வினைகளுக்குள்ளாவது, கருத்தின் தொடர் வளர்ச்சிக்கு உதவும்; அதற்காக எனது நன்றி ஆயினும் பீடிகைகள், புகழுரைகள் இல்லாமலேயே கருத்துகள் வெளிப்படுத்தப்படுவதும், எதிர் கொள்ளப்படுவதும் ஆரோக்கியமானது. ஏனெனில், பீடிகைகளும் ஒருவகையான சடங்கு மனோபாவத்தின் வெளிப்பாடே.

காலந்தோறும் கருத்துகள் வளர்கின்றன. கருத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப காலதர்மமும் மாறுதலுக்குள்ளாகும். இவற்றை பிரக்ஞை பூர்வமாக அறிந்து, எமது எழுத்தும் ஏனைய செயல்களும் தொழிற்படவேண்டும். இதையே விஞ்ஞான அணுகுமுறை எனலாம். சேரிகளை நாறவிட்டுக்கொண்டு விண்வெளியாத்திரை செல்வதற்கும், அவலங்களின் நடுவே தமக்கு அரியாசனம் தேடும் அரசியலுக்கும், தமது இனத்தின் துயரங்களின் நடுவே தமக்கு மணிமுடி சூடிக் கொள்ளும் எழுத்தாளர்களுக்கும் இடையில் எந்த வித வித்தியாசமும் கிடையாது. இந்தச் செயல்கள் சமூக விஞ்ஞான, தார்மீக அணுகுமுறை எதற்கும் ஒத்துவராதவை. எழுத்தை ஒரு தேடலாகவும், சமூகக் கடமையாகவும் கொள்ளும் எழுத்தாளன் ஒருவன், நலிந்து துன்பமுறும் மக்களுக்குத் தோள் கொடுப்பவனாய் இருப்பானே அன்றி நலிந்தவர் தோளிலேறி தான் வலம் வரமாட்டான். யாழ். பொது நூலகம், பத்திரிகைக் காரியாலயம் எரிப்பு என்னும் கலாசாரப் படுகொலைகளுக்குப் பின்னால் — விமர்சகரும் கலைஞருமான மு நித்தியானந்தன், நிர்மலா ஆகியோர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்தவேளை — அரசின் சாகித்திய மண்டலப் பரிசுகளை நிராகரியுங்கள் என்ற குரல் எழுந்ததல்லவா? அதையும் மீறி கைநீட்டிய 'பரிசுகெட்ட' எழுத்தாளரை நாம் எவ்வாறு பார்க்கோம்? தமிழகத்தில் மக்களின் வரிப்பணத்தை இறைத்து படாடோப, ஆடம்பர 'கும்பமேளா'வாகக் கொண்டாடப்படும் தமிழாராய்ச்சி மாநாட்டுக் கேவலங்களைப் புறக்கணியுங்கள் என்று தமிழகத்தின் முற்போக்காளர்கள் வேண்டினார்கள் அல்லவா? அந்தக் குரல்களை ஏறிமிதித்து 'கும்பமேளா'க் கொண்டாடிய நமது ''முற்போக்கு ஆசான்களை'' நாம் எவ்வாறு பார்த்தோம்? அவர்களிலிருந்து இந்த மணிவிழாக்காரரை நாம் எவ்வாறு விலக்கிப் பார்க்கலாம்? அவரேதான் இவர்; இவரேதான் அவர். இவர்களின் இந்தப் பாவச் செயல்களுக்கெல்லாம் 'மணிவிழா மலர்கள்' ஒரு பரிகாரமல்ல. கி. ராஜநாராயணனுடைய உதாரணம் மணிவிழாவின் அவசியத்தை வலியுறுத்தவல்ல. நமது எழுத்தாளரின் சமூகக் கடமையை இன்னுமொருபடி மேலுயர்த்தத்தான் அவரை உதாரணித்தேனே அல்லாமல், ஒருபடி கீழிறங்க அல்ல. கி ரா. எம்மை ஒத்த அவலமான கொடுமை நிறைந்த சூழலில் இருந்திருந்தால் அவர் இன்னும் கூடிய முன்னுதாரணராகவே நடந்து கொண்டிருப்பார் என்பதே உண்மை.

ஒருவரிடம் பணமோ விழா நடத்தும் ஆசையோ இருப்பது மணிவிழாவையோ அஞ்சலி விழாவையோ தீர்மானிக்காது என்கிறார் நடராசன் உண்மைதானா? அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஒரு தொழிலதிபர் 'மணி' விழாக் கொண்டாடினாரே அதைத் தீர்மானித்தது எது? அதில் பல்கலைப் பேராசிரியர்களும் மற்றும் பிரமுகர்களும் பக்கமேளம் வாசித்ததும் ஏன்? கடந்தகால, நிகழ்கால அரசுகளின் கீழ் சமாதான நீதிபதிகள், செனெட்டர்கள், எம். பிக்கள், மந்திரிகள் இவற்றையெல்லாம் பணம் தீர்மானிக்கவில்லையா? இவர்களை எல்லாம் பாராட்டி விழாவெடுத்து எமது சமூகத்தைச் சீரழித்ததில் பட்டம், பதவி நோக்கிகள், பல்லிளிப்புகள் பெரும்பங்கு வகித்ததனை நடராசன் மறுப்பாரா?

தனிமனிதன் ஒருவன் பாராட்டுகளுக்கும், விழாக்களுக்கும் அலைவது அவனது பலவீனம், பக்குவமின்மையைச் சார்ந்தது. ஆனால் உண்மை எழுத்தாளன் ஒருவன் சமூகத்தின் மனச்சாட்சி போன்றவன். அவனது படைப்புத் தொழில் சமூகத்தின் மனச்சாட்சியை நிமிர்த்தவேண்டியது. அவனது எழுத்தும் செயலும் அந்த நிமிர்வில் நடக்க வேண்டியன. அத்தகையவனுக்கு நன்றி பாராட்டக்கடமைப்பட்ட சமூகத்துக்கு, அவனுக்கு உதவும் வழிகள் பல உள்ளன. அவனது நூல்களைப் பதிப்பிக்க, பரவலாக விநியோகிக்க, தாமும் வாங்கிப்படித்துப் பயன்பெற முயற்சிப்பது அவனுக்கு உதவும். தனது எழுத்து பரவலாக வாசகர்களைச் சென்றடைவது குறித்தும், விமர்சன பூர்வமான எதிர்வினையை எழுப்புவது குறித்தும் ஒரு எழுத்தாளன் பெருமைப்படலாம். ஆனால் சமூகம் மாலை சூட்டிகளாகவும் தான் அதற்கு கழுத்துநீட்டியாகவும் மாற நினைப்பது, சுத்த அபத்தமானதாகும்.

வெள்ளிவிழா, வைரவிழா இவைபற்றிக் குறிப்பிட்டார். இவையெல்லாம் கூட்டுழைப்பில் நிமிரும் நிறுவனங்கள், பத்திரிகைகள் இவைக்கே உரியன. இத்தகைய விழாக்கள் கூட்டுழைப்பின் முயற்சிக்கு, அதன் பங்காளிகளான சகலதர உழைப்பாளர்க்கும் நன்றி விழாக்களாக, பெருமிதவிழாக்களாக அமையும். ஆனாலும் இவற்றுக்குக்கூட காலம், சூழல், நெருக்கடி என்பவை கணக்கிலெடுக்கப்பட வேண்டும். பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவை அங்கேயே கொண்டாடமுடியாமைக்குரிய காரணம் அறிந்து, கொழும்பில் ஆடம்பரங்களின்றி 'அடக்கி வாசித்திருந்தால்' பண்பாக இருந்திருக்குமல்லவா? நாட்டின் நலிவுக்குதவ வேண்டியதை நிறுவனப் பெருமைகாட்டவா பயன்படுத்த வேண்டும்? தனிமனிதனிலிருந்து நிறுவனங்கள் வரை இது பொருந்தி வரும் ஒரு பொது உணர்வாகும்,

இறுதியாக ஒன்று. சடங்குகளும் சம்பிரதாயங்களும் உண்மைக்கு இட்டுச் செல்வனவாக இருக்கும்வரைதான் அவற்றுக்கு இருப்புண்டு. உண்மையைமூடி தாமே உண்மையாய் அவை மாயத் தோற்றம் தரும்போது, அவை உடைபடும். இது கால வளர்ச்சி □

# நெளிவு சுழிவு

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு திடீரென விஸ்வரூபமெடுத்து 1983 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் திகதி முதல் இன்றுவரை அசம்பாவிதங்களின்போது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் ஒன்றிணைந்த திட்டத்தின் கீழ் நன்மைகளை வழங்கி வருகிறது. சுற்றிச் சுற்றி எதைச் சொன்னாலும் எல்லாம் செய்த குற்றங்களுக்குப் பிராயச் சித்தமும், பாவ மன்னிப்பும்தான்! ஒன்றிணைந்த திட்டத்தையும், ஜனசக்தியையும் முற்றாகச் செயற்படுத்தலாம் என்றால் கையிற் கடிக்கிறதாம். இதனால், பண்டங்களுக்கு யானை விலை. 'யானை'களின் ஆட்சியில் யானை விலை போலும்.

இனி, அடுத்து ஒன்றிணைந்த திட்டத்தின் கீழ் பெறக்கூடிய நன்மைகள் மொத்தம் ஆறு. இதில் உற்பத்தி முயற்சிக் கடன், வீடு திருத்தலும் புனரமைப்புக் கடனும் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ஹற்றன் நாஷனல் வங்கிகளில் பெறக் கூடியவை. மீளக் குடியமர்தல் படி ரூபா இரண்டாயிரம் கொடுப்பனவில் பல குழறுபடிகள். பலருக்கு இந்தக்காசு எடுப்பதே பெரிய வேலையாகப்போச்சு.

இது இப்படியிருக்க, ஒட்டை போட்ட குடும்ப அட்டைகளுடன், என்ன ஆகப்போகுது ......... அதையும் பார்த்துக் கொள்ளலாம் என்று சிலர் வங்கிகளின் பக்கம் போயிருக்கிறார்கள். பெறுவதற்குத் தகுதியுள்ள நன்மைகள் — உற்பத்தி முயற்சிக் கடன், வீடு திருத்தலும் புனரமைப்புக் கடன் — இரண்டையும் கேட்டிருக்கிறார்கள். கேட்டது என்னவோ பெருந்தொகைதான். குபேரனிடம் ரூபா ஐந்தா கேட்பது? மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை என்று (எல்லாம் வியாபாரம்தான்) அர்த்தப்பட சமீபத்தில் விளம்பரப் படுத்திய வங்கி ஒன்று, இது தொடர்பான பணிப்புரை தனது கைக்கு எட்டவில்லை என்று கையை விரித்ததாம். சில முகாமையாளர் காணிக் கந்தோர் திறக்கட்டும் என்று சூசகமாகக் கடத்தியுள்ளார்கள். வேறு சிலர் முகம் கோணாது கடன் படிவங்களை வழங்கியும் உள்ளார்கள். காலம் இவர்களுக்கு ஒரு பாட்டெழுதும். என்ன இருந்தாலும் வங்கிகள் எல்லாம் சித்தன் போக்கு சிவன் போக்குத்தான். ஒன்றிணைந்த திட்டமதான்; வங்கிகள் ஒன்றிணையவில்லையே! அன்று சேர சோழ பாண்டியர்கள் ஒன்றிணைந்திருந்தால் இன்று நமக்கேன் இந்த நலிவு?

வங்கிகளிலிருந்து மேலதிகப் பற்றுப் பெற்ற 'பெரும் புள்ளி'கள் போடவேண்டியவர்களுக்குத் 'தொப்பி' போட்டுவிட்டு மாறிவிட்டார்களாம். அதனால், சில வங்கிகள் வாரி வழங்குவதில் தயக்கமும், அசமந்தப் போக்குமாம் என்று கிசுகிசுக்கிறார்கள் வங்கியும் சூடுகண்ட பூனைதானே — இல்லையா? □

நக்கீரன்

# பிரஜா உரிமை ஒரு அடிப்படை மனித உரிமை

1989-09-15 ஆம் நாளுடன், ''உழைக்கப் பிறந்தவர்களான'' மலையகத் தமிழரின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டு 41 வருடங்கள் முடிவுபெறுகின்றன. இந்த மனித உரிமை மீறல் தொடர்பாகவும், ஒடுக்கப்பட்ட இம்மக்கள் எதிர்காலத்தில் மனித உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பாகவும், இக்கட்டுரை வெளியிடப்படுகிறது

''நாங்கள் பிறந்தது உழைக்கவும் சாகவுமே'' — ஒரு தோட்டத் தொழிலாளியின் கல்லறையில் பொறிக்கப்பட்டுள்ள வாசகம்.

1989 செப்ரெம்பர் 15 ஆம் நாளுடன் மலையக இந்தியத் தமிழரின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டு 41 வருடங்கள் நிறைவு பெறுகின்றன அக்கால சட்டம் தொடக்கம் இன்று வரை பல்வேறு பிரஜா உரிமைச் சட்டங்கள், திருத்தங்கள், ஒப்பந்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. எவ்வாறெனினும், இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு வளம் சேர்க்கும் இம் மக்கள் ஒரு நூற்றூண்டுக்கு மேலாக வறுமை, பசி, பிணி, பட்டினி என்பவற்றுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது மட்டுமன்றி, சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் நவீன அடிமைகளாக வாழ்ந்து வருகின்றனர்.

ஆரம்ப கட்டத்திலே இந்தியத் தமிழர் குறித்த கரிசனையோ, அவர்கள் இந்தியாவுக்கு திருப்பியனுப்பப்பட வேண்டும் என்றோ எவரும் பிரச்சினைப்பட்டுக் கொள்ளவில்லை. 'அவர்கள் சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகள் அற்று, தொழிற் சங்கங்களோ, வேறுவகையான இயக்கங்களோ இல்லாமல், மலைநாட்டில் புவியியல் ரீதியாக தனிமைப்படுத்தப்பட்டு, சிறைப்பிடிக்கப்பட்ட தொழிலாளர் கூட்டமாக இருக்கும் வரை, அவர்களது பெரும் எண்ணிக்கையைப் பற்றி எவரும் கவலைப்படவில்லை அவர்கள் எத்தகைய கண்டிப்புக்கும் ஆளாகவில்லை.

**பி. சிவப்பிரகாசம்**

அவர்கள் அரசியல் ரீதியாக முன்னெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும், வர்க்கரீதியாக சிங்கள விவசாய — தொழிலாளருடன் ஒன்றுபட முனைவர் என்ற எண்ணம் வலுவடைந்த போதும், இயல்பான, சமூக அரசியல் பொருளாதார மேலுந்தல் ஏற்பட்ட போதும், அரசியல் யாப்பு சீர்திருத்த விவாதங்களில் சர்வஜன வாக்குரிமை பற்றிய பிரச்சினை எழுந்த போதும், இவர்கள் இடதுசாரிகளைச் சார்ந்து செயல்பட முயற்சித்த போதுமே இந்தியத் தமிழர் குறித்த ஒரு பய முறுத்தல் இனரீதியான கண்ணோட்டத்துடன் மட்டுமன்றி வர்த்தக ரீதியான பார்வையுடனும் சிங்களப் பேரின வாதிகளினால் பேரின மக்கள் மத்தியில் பொறியாகப் பற்ற வைக்கப்பட்டது. அது இன்று கொழுந்து விட்டெரிவதில் வியப்பொன்றுமில்லை.


1902 களிலிருந்தே இந்தியத் தமிழர்களுக்கெதிரான இனவாத நடவடிக்கைகள் அநாகரிக தர்மபால போன்றவர்களால் முன்வைக்கப்பட்டன. ''ஆங்கிலேய நிர்வாகத்தில் தென்னிந்தியாவின் கீழ்சாதியினர் எமது தீவில் குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர்'' என்று அவர் குறிப்பிட்டார். இது தொடர்ந்து 1928 ஆம் ஆண்டு சர்வஜன வாக்குரிமை பற்றிய பிரச்சினையின் போது, இந்தியத் தமிழர்களுக்கு வாக்களிக்கும் உரிமை பற்றிய பெரும் சர்ச்சையைக் கிளப்பி விட்டது. டீ.எஸ். சேனநாயக உட்பட பெரும்பாலான சிங்களப் பிரதிநிதிகள் 'இந்தியத் தமிழருக்கு வாக்குரிமை அளிப்பதன் மூலமும் சிங்கள மக்கள் அரசியல் ரீதியாக செயலற்றுப் போய்விடுவர்' என்று குறிப்பிட்டனர். டீ. எஸ். சேனநாயக ''இந்தியர்களுக்கு ஒரு பெரிய நாடு உள்ளது. எங்களுக்கு இச் சிறு நிலமே உள்ளது. இந்த நாடு எங்களுக்கு வேண்டும்'' என்று படுமிலேச்சத் தனமான இனவாதக் கண்ணோட்டத்துடன் குறிப்பிட்டார்.

சட்டசபை உறுப்பினர் வி. டி. எஸ் விக்ரமநாயக என்பார் ''கொழும்பில் வசிக்கும் இந்தியரைவிடவும் தோட்டக் கூலியை நான் மிகவும் அஞ்சுகின்றேன். இத்தீவில் நிகழ்வனபற்றி அவனுக்கு என்ன தெரியும்? எனவே அரசியல் விடயங்களில் வாக்களிக்கும் தகமை அவனுக்கு இல்லையென்றே-கூறுவேன்'' என்றார். இவர் வர்க்க ரீதியான உணர்வுகொண்டே, கொழும்பிலுள்ள இந்திய முதலாளிகளையும், தோட்டத் தொழிலாள வர்க்கத்தையும் வேறுபடுத்தினார் என்று கருதக்கூடியதாக உள்ளது.

ஆனால் பல இடதுசாரிகளும், சிறுபான்மையினப் பிரதிநிதிகளும், இவர்கள் குறித்த கரிசனையைக் கொண்டிருந்தனர் என்பதை மறுக்க முடியாதுள்ளது. சி. எச். இசற். பெர்னாண்டோ, நடேச ஐயர், டி. பி. ஜயா போன்றோர் இதில் முதன்மைப் பெறுகின்றனர். நடேச ஐயர் அவர்கள் ஒரு இந்தியராய் இருந்தபடியாலும், இடதுசாரி வர்க்கப் பார்வையுடயவராய் இருந்தபடியாலும், ''எமக்கு இந்தியர்கள் வேண்டும். அவர்கள் இலங்கையருடன் சமமான உரிமை பெற்றிருத்தல் வேண்டும்'' என்று குறிப்பிட்டார். இவ்வாறே சட்டசபையில் டி. பி. ஜயா என்பார் ''இந்தியர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை அளிப்பதை தொழிற் கட்சி மிகத் தீவிரமாக ஆதரிக்கின்றது. சிங்களத் தொழிலாளி தனது இந்தியச் சகோதரனுக்கு வாக்குரிமை அளிப்பதைத் தடுக்கமாட்டான்'' என்ற வாதத்தை முன்வைத்தார்.

இந்தியத் தொழிலாளரும், சிங்கள விவசாய-தொழிலாளரும் வர்க்கரீதியாக ஒன்றிணைவது முதலாளித்துவவாதிகளுக்கும், ஏகாதிபத்திய வாதிகளுக்கும் எதிர் காலத்தில் பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்பதை அக்கால சிங்கள-ஐரோப்பிய முதலாளித்துவவாதிகள் கவனத்தில் கொண்டிருந்தனர்.

1940 களின் பின் தோட்டங்களில் பல்வேறு மாறுதல்கள் ஏற்பட்டன. வேலை நிறுத்தங்கள், தொழிற் கிளர்ச்சிகள், சிங்களத் தலைவர்களை உறுதிகுலைய வைத்தன. ஒழுங்குபடுத்தப்பட்ட தோட்டத் தொழிலாளர் இடதுசாரி அமைப்புகளுடன் இறுகப் பிணைக்கப்பட்டுவருவதும்: அதனால் ஏற்படக் கூடிய அபாயங்கள் குறித்தும் எச்சரிக்கை விடுக்கப்பட்டன. தொடர்ந்து



பெண் தோட்டத் தொழிலாழி ;
கோ. கைலாசநாதனின் ஓவியம்

1947 இல் நடைபெற்ற தேர்தலில் இலங்கை இந்திய கொங்கிரஸ் மூலம் 7 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டதும், இடதுசாரிச் சிங்கள தலைவர்களை இந்தியத் தொழிலாளர்கள் ஆதரித்தும், சிங்கள பூர்சுவாக்களுக்குப் பெரும் அச்சத்தையும் நடுக்கத்தையும் ஊட்டியது.

இதன் வெளிப்பாடாகவே டீ. எஸ். சேனநாயக்காவினால், 1948 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க பிரஜா உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டமூலமானது ஒரு மனிதாபிமானமற்ற இனவாதக் கண்ணோட்டத்துடன் மட்டுமல்ல, வர்க்கரீதியாக இம்மக்களை அடக்கி, ஒடுக்கு முறைக்குள்ளாக்க வேண்டும் என்பதே அக்கால சிங்கள தேசிய தலைவர்களின் நோக்காக இருந்தது என்பதைக்காட்டுகிறது. இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு முற்று முழுதாக தமிழ் மக்களுக்கு எதிரானதாகவே இருந்தது.

இச் சட்டவாக்கம் பிரதிநிதிகள் சபையில் பல்வேறு வாதப் பிரதிவாதங்களுக்கு உள்ளானது. பல சிங்களப் பிரதிநிதிகள் (டீ. எஸ். சேனநாயக்க, ஜே. ஆர். ஜயவர்தன, ஏ. இரத்நாயக்க உட்பட) இதை ஆதரித்தனர். ஆனால், பல இடதுசாரிகளும், சிறுபான்மை இனப் பிரதிநிதிகளும் வன்மையாகக் எதிர்த்தனர். இச்சட்டவாக்கம் குறித்து எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் 10-12-1948 இல் பிரதிநிதிகள் சபையில் ''இச்சட்டமூலத்தினால், தோட்டங்களிலுள்ள இந்தியத் தொழிலாளர் நாட்டினம் அற்ற வகுப்பினராக, அடிமைகளாக, குடியுரிமையற்ற மக்களாக மாற்றப்படுவர். இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நவீன வழிகளையே கையாளவேண்டும். சமூகங்களுக்கிடையே நீதியும் நியாயமும் வழங்கும் கோட்பாடுகளின் அடிப்படைமீது இப்பிரச்சினை விடுவிக்கப்படவேண்டும். இவ்வாறு நீங்கள் செய்யாவிட்டால், இரண்டில் ஒன்றுதான் நடக்கமுடியும். ஒன்றில் ஒரு சமூகத்தை அழித்து ஒழிப்பீர்கள். அல்லது வகுப்புவாத போராட்டத்தை மோசமாக்குவீர்கள்'' என்று இந்தியத் தமிழ் மக்கள் குறித்த ஒரு தீர்க்கதரிசனத்தை முன்வைத்தார்.

இச்சட்டமூலத்தை எதிர்த்த இடதுசாரிகளில் கலாநிதி எம். என். பெரேராவும் ஒருவராவார். பாட்டாளிவர்க்க நலனையும், குணாம்சத்தையும் கருத்தில் கொண்டு இவர் தனது கருத்துக்களை முன்வைத்தார். ''மாண்புமிகு பிரதமர் அறிவார், கோப்பி பயிர்ச்செய்கை நாட்கள் தொடக்கம், இந்திய குடிமக்களில் கணிசமானோர் அவர்களது விருப்புக்கு மாறாக, இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டார்கள் என்பதையும்; கொண்டுவரப்பட்டது தொடக்கம் இந்நாட்டில் அவர்கள் பல தலைமுறைகளுக்கு வாழ்ந்து வருகின்றார்கள் என்பதையும் இம் மக்கள் அனைவரும் பிரஜைகளாகும் உரிமைகளிலிருந்து தள்ளி வைக்கப்பட்டுள்ளார்கள். இம்மசோதாவின் மூலம், தமது உயிரையும் அர்ப்பணித்த இந்த மக்கள் அனைவரும் மறுதலிக்கப்பட்டுள்ளார்கள், அது நீதிதானா? எதன் அடிப்படையில் இத்தகைய குணாம்சத்தைக் கொண்ட ஒரு மசோதாவை நாம் நியாயப்படுத்த முடியும்?'' என்று தனது எதிர்ப்புக் குரலை எழுப்பினார்.

கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா இம்மசோதா இனவாதத்தின் அடிப்படையில் மக்களை கூறுபோடும் என்பதை முன்கூட்டியே கூறிவைத்தார் அவர் தனது உரையில் ''இம்மசோதாவானது, சர்வஜன வாக்குரிமைக்கு பாரதூரமான கெடுதியை விளைவிக்கும் ஒரு எதிர்காலத்தைத் தோற்றுவிக்கும் வண்ணம் இனவாத மண்வெட்டியால் தோண்டப்பட்ட ஒரு குழியாகும்'' என்று, குறிப்பிட்டார்.

இக்காலகட்டத்தில் பிரதிநிதிகள் சபையில் மலையக உறுப்பினர்கள் 7 பேர் இருந்தமை (எஸ். தொண்டமான் உட்பட) குறிப்பிடத்தக்கது. ஆனால் பிரதிநிதிகள் சபையில், இடதுசாரிகளுடன் ஒப்பிடுகையில் இவர்களின் முன்னெடுப்பு நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதா என்பது கேள்விக்குறியே. இதேவேளை 1948 — 1949 பிரஜா உரிமைச் சட்டமூலங்களை எதிர்க்கும் முகமாகவே இப்பிரஜா உரிமைக்கு எவரும் விண்ணப்பிக்க வேண்டாம் என்று இலங்கை இந்திய கொங்கிரஸ் கேட்டுக் கொண்டது. பின் அதற்கான சரியான, தெளிவான நடவடிக்கை முன்வைக்கப்படவில்லை.

1949 ஆம் ஆண்டு இந்திய — பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டப்படி குடியுரிமைக்கு விண்ணப்பித்தோர்களின் விண்

(11ஆம் பக்கம் பார்க்க)

# கந்தரோடைப் பகுதியின் வரலாற்று முக்கியத்துவம்

ஈழத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளுள் கந்தரோடையும் ஒன்றாகும். இதற்கு 'கதிரமலை' என்ற இன்னோர் பெயரும், ஆரம்பத்தில் வழங்கப்பட்டது. தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையில் காணப்பட்ட நீண்டகால கடல்சார் வர்த்தகத் தொடர்புகளால், கந்தரோடையும் ஒரு முக்கிய நகராக வளர்ச்சியுற வாய்ப்பேற்பட்டது. தென்னிந்தியாவில் சங்ககாலப் பகுதியில் சிறப்புற்று விளங்கிய துறைமுகங்களான கொற்கை, காவிரிப்பூம்பட்டனம், அரிக்கமேடு போன்றன மிக நெருக்கமான வர்த்தகத் தொடர்புகளை ஈழத்துடன் கொண்டிருந்தன. அந்த வகையிலேயே கந்தரோடைப் பகுதியின் முக்கியத்துவத்தை இனங்காண முடியும்.

கந்தரோடை நகரை பாக்கு நீரணையுடன் இணைக்கும் பாதையாக, வழுக்கியாறு காணப்பட்டது. வர்த்தகர்கள் தமது மரக்கலங்களை வழுக்கியாற்றினூடாக கந்தரோடைப் பகுதிக்குள் கொண்டு வர முடிந்தது. இத்தொடர்பானது கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் உரோமர்களின் வர்த்தக நடவடிக்கைகள் வீழ்ச்சியுறும் வரை நிலவி வந்தது. இந்தப் பின்னணியில் நோக்குமிடத்து, தென்னிந்தியாவின் பெருங்கற்கால பண்பாட்டம்சங்கள் (கி. மு. 500), அவற்றுடன் கூடிய இயற்கை வழிபாடு, பௌத்த மத செல்வாக்கு என்பனவும் கந்தரோடைப் பகுதியில் செல்வாக்குப் பெற்றன.

இப்பகுதியில் இரு தடவைகள் அகழ்வாராய்ச்சிகள்— 1918 காலப்பகுதியில் சேர் போல் பீரிஸ் (Sir Paul E. Pieris) அவர்களாலும், 1970 காலப்பகுதியில் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தாராலும்-மேற்கொள்ளப்பட்டன போல் அவர்களின் ஆய்வின்போது மீன் வடிவம் பொறித்த பௌத்த, பாண்டிய நாணயங்கள்; அச்சுக் குத்தப்பட்ட நாணயங்கள் (இவை 'புராணஸ்' நாணயங்கள் என ஓர் இந்து நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது); 18 செம்பு நாணயங்கள், (இவற்றில் எந்த இலச்சினைகளும் அடையாளம் காணப்படவில்லை இந் நாணயங்கள் 'புராணஸ்' நாணயங்களைவிட காலத்தால் முந்தியதாக போல் குறிப்பிடுகிறார்); பௌத்த ஸ்தூபிகள்; செம்பினால் வார்க்கப்பட்ட நீளமான கோல்கள் (Rods) முதலியன கண்டுபிடிக்கப்பட்டன. (இதே போன்ற கோல்கள் கி மு. 2000 ஆண்டளவில் எகிப்தில் போர்க்கருவிகளாக பயன்படுத்தப்பட்டன.

1970 இல் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தினர் மேற்கொண்ட ஆய்வின் போது, மூன்று படையான மண்ணடுக்குகள் அடையாளம் காணப்பட்டன. அடியில் காணப்பட்ட இரு அடுக்குகளிலும் தென்னிந்திய பெருங்கற்கால பண்பாட்டு அம்சங்களான கறுப்புச் சிவப்பு மட்பாண்டங்கள், இரும்பாலான கருவிகள் காணப்பட்டன இப்படைகள் வரலாற்று உதய காலத்தவை. (வரலாற்றுக் காலமென வரையறுக்கப்படும் எழுத்தாதாரமுள்ள காலப்பகுதிக்கு முன்புள்ள நிலை) எனவும், அவை ஏறத்தாழ கி மு. 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருக்கும் எனவும் விமலா பேக்லே (Begley . V) குறிப்பிட்டுள்ளார். கந்தரோடை அகழ்வாய்வு சம்பந்தமாக தெளிவான ஓர் அறிக்கை வெளிபிடப்படாத போதிலும் 1973 இல் பேக்லே ஓர் அறிக்கையில் இக்கருத்தை வெளிப்படுத்தியுள்ளமையைக் காணலாம் மேலே காணப்பட்ட மண் படையில் பௌத்த ஸ்தூபிகளையும், சதுர வடிவான நாணயங்களையும் (யானை, மரம், சுவஸ்திகா குறியீடு, மலை அல்லது ஸ்தூபி போன்ற இலச்சினைகள் காணப்பட்டன) அடையாளம் காணமுடிந்தது.

பௌத்த எச்சங்களைக் கருத்திற் கொள்ளும்போது. தென்னிந்தியாவில் தமிழர்களால் பின்பற்றப்பட்ட பௌத்தப் பண்பாடு கந்தரோடைப் பகுதியிலும் செல்வாக்கு செலுத்தியதைக் காணலாம். ஆரம்பத்தில் யாழ் குடா நாட்டில் வாழ்ந்த ஆதித் திராவிட குடிகளான நாகர்களில் ஒரு பகுதியினரும், தென்பாகத்தில் மகியங்கணைப் பகுதியில் வாழ்ந்த இயக்கர் குடிகளும் பௌத்தர்களாக இருந்திருக்கலாம். இந்தக் கூற்றிற்கு ஆதாரமாக, கௌதம புத்தரின் பாதச் சுவடுகளைப் பதித்த கற்சாசனங்களைக் கொண்ட வழிபாட்டுத் தலங்கள், யாழ்ப்பாணத்திலிருந்து திசமகாராமை வரை பரந்திருப்பதைக் குறிப்பிடலாம். அத்துடன் கி.மு. 3 ஆம் நூற்றாண்டிற்குரிய பழைய பிராமிக் கல்வெட்டுகள், தமிழ் வணிகர்களினால் வழங்கப்பட்ட குகைகள் பற்றியும், குறிப்பிடுகின்றன. அந்த வகையில் இங்கு வாழ்ந்த மக்களின் பண்பாடு ஒன்றாகவும், வழிபாட்டம்சங்கள் வேறானவையாகவும் இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

'மகாவம்சத்'தில் தமிழ்ப் பௌத்த பிக்குவான சங்கமித்திரர் பற்றிய குறிப்புண்டு. தமிழ்ப் பிக்குகளின் பணியானது பாளி இலக்கியத்தில் காணப்பட்டாலும், சாத்தனார் எழுதிய தமிழ் பௌத்த காவியமான 'மணிமேகலை' முக்கிய இடம் பெறுகிறது. அத்துடன் வீரசோழியம், குண்டலகேசி, நீலகேசி, பிம்பிசாரன்கதை போன்ற பௌத்த நூல்களும் இங்கு குறிப்பிடத்தக்கவை. இது தமிழர்கள் பௌத்தர்களாகவும் இருந்தனர் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

கி.பி. 8 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் இலங்கையில் இனக்கலப்பான ஆட்சிமுறையொன்று நிலவத் தொடங்கியது. குறிப்பாக தம்பபன்னியில் தமிழ்க் கலப்புள்ள அரசை நிறுவிய மன்னர் பரபபரையில் வந்த உக்கிர சிங்கன், மாருதப்புரவல்லி என்ற சோழ இளவரசியை மணம் முடித்து கதிரமலையை — கந்தரோடையை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்ததாக கைலாயமாலை, வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்கள் குறிப்பிடுகின்றன.

பிற்பட்ட காலப்பகுதியில் குறிப்பாக ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்தில் இந்து மதத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டதால், பௌத்தமதம் அரச ஆதரவின்றி வலுக்குன்றத் தொடங்கியதைத் தொடர்ந்து, கி.பி 1550 காலப்பகுதியில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்திய சங்கிலி மன்னன் காலத்தில் இந்து மதத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதோடு, பௌத்த மதம் சார்ந்த சின்னங்களும் அழிக்கப்பட்டதால், ஈழத்தின் வடபாகத்தில் பௌத்தம் செல்வாக்கை இழந்தது.

யாழ்ப்பாணப் பிரதேச அமைப்பை மையமாக வைத்து சுண்ணாம்புக் கற்களாலேயே கந்தரோடை பௌத்த ஸ்தூபிகள் கட்டப்பட்டிருந்தன. இவ்வாறான தமிழர் பாரம்பரியத்தை வெளிக் கொணரும் சின்னங்கள் மேலும் தமது கதையை எடுத்துச் சொல்வதற்கு, ஒரு முழுமைப் படுத்தப்பட்ட தொல்லியலாய்வின் தேவை உணரப்படுவதோடு, செயற்படுத்தல் படவும் வேண்டும். □

□ ஏ. சுபாஷ் □



கந்தரோடையில் பௌத்த அடையாளங்கள்

## பனை தொடர்பான சில தகவல்கள்

- பனம் பழத்திலிருந்து குடிபானம் தயாரிக்கலாம். இதில் உடம்புக்கு ஊறு விளைவிக்கக் கூடியதாக எதுவும் இல்லை. என்று ஜெர்மனியில் உள்ள ஆராய்ச்சி நிலையத்தின் பரிசோதனை முடிவுகள் தெரிவிக்கின்றன.
- வட பகுதியில் பனம் கள்ளிலிருந்து மதுசாரம் வடிப்பதற்கு 'தங்கொட்டுவ முறை' பயன் படுத்தப் படுகிறது. இது செலவதிகமானது; துப்பரவுள்ளது. 1990 இல் புதுமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது,
- பனம் பழத்திலிருந்து மதுசாரம் வடிக்கலாம். இது கள்ளிலிருந்து வடிப்பதை விட இலகுவானதும், இலாபகரமானதும் ஆகும்.
- புதுக் கண்டுபிடிப்பான ஈ. டி ரி. ஏ. என்ற இரசாயனக் கலவையை பனம் பாளைகளில் தடவினால், கள் அதிகமாகச் சுரக்கும். ஆனால், மரபுவழியான சீவற்தொழில் முறைகளில் நம்பிக்கை உள்ள தொழிலாளர் இதை ஏற்கிறார்கள் இல்லை.
- பனந்தும்பு இலகுவில் பழுதடையாது. இதைப் பக்ரீறியா, பங்கஸ் ஆகியன தாக்காது.
- மதுசாரத்திலிருந்து எடுக்கப்படும் மதுவத்தை (Yeast) கால்நடைகளுக்கு உணவாகப் பாவிக்கலாம். இதில் 50 – 60% புரதம் உள்ளது.
- மதுவத்திலிருந்து எடுக்கப்படும் கழிவு நீர் சுற்றாடலைப் பாதிக்காது; பயிர்களுக்கும் பாவிக்கலாம்; நிலத்தில் பிராணவாய்வு குறைவடையாது.
- பனை நட்டு அதனால் பிரயோசனம் பெற பதினைந்து வருடங்கள் பிடிக்கும் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள ரிஷ்யூ நாற்று நடுகை முறையில் ஐந்து வருடங்களில் பயனைப் பெறலாம்.
- வறட்சியைத் தாங்கக் கூடிய பரம்பரை அலகுகள் பனை வேரில் உள்ளன. இதை நெற்பயிர்களுக்கு மாற்றினால், நெற்பயிர் நீண்டகாலம் வளர்ந்து பயன் தரும்.
- திரிபோசா போல் பாம்போசா (Farm Posa) என்ற சத்துணவு மா, 600 கிராம் கொண்ட பைகளில் அடைக்கப்பட்டு சந்தைப் படுத்தியுள்ளார்கள்.

# எரிமலைகள் எச்சரிக்கின்றன

ச. ஜெயக்குமார்

பல்லாயிரக்கணக்கான உயிர்களையும் பல இலட்சக் கணக்கான சொத்துக்களையும் அழிக்கின்ற எரிமலையானது, வெடிப்பிற்கு முன் தெளிவான எச்சரிக்கைகளைக் கொடுக்கின்றது. முதலில் சிறிய நடுக்கம் ஏற்படும். பின்னர் மலையின் உரு மாற்றம் அடையும். இவ்வேளையில் வழக்கத்திற்கு மாறாக கூடுதலான வாயு வெளிவருவதுடன் மேற்பரப்பு வெப்பநிலையும் உயருகின்றது. மேலும் சிறிய நீராவி வீழ்ச்சிகள் உருவாகின்றன.

மேற்கூறப்பட்ட அறிகுறிகள் கூர்மையாக அவதானிக்கப்படின், சரியான நேரத்தில் மக்கள் பாதுகாக்கப்படுவர். இவ்வாறாக அவதானிக்கப்பட்ட போது முன்னெச்சரிக்கையாக மக்கள் இடம்பெயர்ந்த சம்பவங்கள் நிறைய உண்டு. 1976 இல் மேற்கிந்தியதீவொன்றில் எரிமலை வெடிக்கப் போகின்றது எனக்கருதி 76 000 மக்கள் இடம் பெயர்க்கப்பட்டனர். ஆனால் இன்று வரை இந்த எரிமலை வெடிக்கவில்லை. ஆனால் 1980 இல் அமெரிக்காவில் எரிமலை ஒன்றின் வெடிப்பினால் 60 பேர் மட்டுமே இறந்தனர். மிகுதியாவரும் இடப்பெயர்வின் மூலம் பாதுகாக்கப்பட்டனர். எச்சரிக்கைகளைக் கவனிக்காமையே 60 பேரின் இறப்பிற்குக் காரணமானது.

மக்மாவின் ஒருவித அமைப்பின் காரணமாகவே எரிமலை வெடிக்கின்றது. எரிமலையிலிருந்து உருவாகும் லாவா எனப்படும் பதார்த்தத்தில் கூடுதலான சிலிசிக்கமிலம் இருப்பின், அது மலையின் மற்றைய பகுதிகளும் வெடிப்பதற்குக் காரணமாகின்றது. இங்கு வெப்ப வாயுவின் அமுக்க அலைகள் மணிக்கு 200 கிலோமீற்றர் வேகத்தில் செல்வதாலேயே, மக்கள் இவ்வெரிமலையிலிருந்து தப்பமுடியாமல் போகிறது. 1815 இல் இந்தோனேசியாவில் நிகழ்ந்த எரிமலை வெடிப்பே மிக உக்கிரமானது. இதில் 92 ஆயிரம் மக்கள் இறந்தனர்.

விண்வெளி ஏவுகணைகளும் பூமியின் மேற்பரப்பு வெப்பநிலையை அளவிட்டு, எரிமலை தோன்றவிருக்கும் சமயங்களில் எச்சரிக்கின்றன. எச்சரிக்கை அறிகுறிகள் இன்னும் கொஞ்சம் அடைமறிக்கப்படின், எரிமலையிலிருந்து முற்றான பாதுகாப்பைப் பெறலாம். □

## ஸ்பானிய மொழியில் காதற்கதை எழுதும்

# மார்க்ஸிய எழுத்தாளர்

இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர்களில் முக்கியமான ஒருவர் கப்ரியேல் கார்ஸியா மார்குவேஸ் (Gabriel Garcia Marquez). 1982 ஆம் ஆண்டு இந்த ஸ்பானியமொழி எழுத்தாளருக்குப் பரிசு கிடைத்தது. இவர் பிறந்த நாடு மெக்ஸிக்கோ.

இவர் தன்னை ஒரு மார்க்ஸிய எழுத்தாளர் என்று சொல்லிக் கொண்டவர். ஆனால் மார்க்ஸிய எழுத்தாளர்கள் பலர் "சோசலிஸ யதார்த்தவாத"த்தில் நம்பிக்கை கொண்டவர்கள்.

மார்குவேஸ் எழுதிய நாவல்களோ கற்பனை, மந்திரதந்திரங்கள், கனவுகள் போன்ற கற்பனுலயப் பண்புகள் கொண்டவையாக உள்ளன என்று விமர்சகர்கள் சுட்டிக் காட்டியிருக்கின்றனர். இந்த விதத்தில் பார்க்கும் போது தான் மார்குவேஸ் வித்தியாசமான ஒரு முக்கியஸ்தர் என்பது தெரியவருகிறது.

மெக்ஸிக்கோ நகரிலே வசித்துவரும் இந்த முதுபெரும் லத்தீன் அமெரிக்க எழுத்தாளரின் ஸ்பானிய மொழி நாவல்கள் ஆங்கிலத்திலும் பெயர்க்கப்பட்டுள்ளன.

இவர் எழுதிய நாவல்களிலே ஆங்கிலத்தில் பெயர்க்கப்பட்ட நாவல்கள்: தனிமையில் நூறு வருடங்கள் (One Hundred Years Of Solitude), குலமுதல்வனின் இலையுதிர்காலம் (The Autumn Of The Patriarch), வாந்திபேதி இருந்த காலத்தில் நிலவிய காதல் (Love in The Times Of Cholera), இவற்றிலே கடைசியாகக் குறிப்பிடப்பட்ட நாவல் இந்த ஆண்டு முற்பகுதியிலே வெளியாகியது. இந்த நாவலிலே, தமது பெற்றோரின் காதற்கதையை நாவலாசிரியர் மார்குவேஸ் கூறுகிறார் என அறிகிறோம்.

'வாந்திபேதி இருந்த காலத்தில் நிலவிய காதல்' நாவலைப் பற்றிய விமர்சனங்கள் அமெரிக்க, இங்கிலாந்து மற்றும் ஆங்கில மொழிப் பத்திரிகைகளில் இப்பொழுது வெளிவந்து கொண்டிருக்கின்றன.

நியூயோர்க் டைம்ஸ் புக் ரிவியூ அனுபந்தம் ஏப்ரில் மாதம் 10

**கே எஸ். சிவகுமாரன்**

ஆம் திகதி மார்குவேஸுடன் நடத்தப்பட்ட ஒரு பேட்டியை வெளியிட்டது, பேட்டி கண்டவர்: மார்லிஸ் ஸிமோன்ஸ் (Marlis Simons). பேட்டியாளரும் ஒரு நூலாசிரியர். இவர் எழுதிய நூல்: புகைக்கும் நிலைக்கண்ணாடி: லத்தீன் அமெரிக்காவில் வாழ்க்கை முறை (The Smoking Mirror: Life in Latin America).

ஸிமோன்ஸின் பேட்டியிலிருந்து பெறப்பட்ட சில விபரங்கள்:

கப்ரியேல் கார்சியா மார்குவேஸின் ஸ்பானிய மொழி நாவல்களை, வழமையாக ஆங்கிலத்திலே மொழிபெயர்ப்பவர் கிரகோரி ரபஸ்ஸா (Gregory Rabassa). அவருடைய திறமையில் மூல நாவலாசிரியரான மார்குவேஸுக்கு முழு நம்பிக்கையுண்டு. ஆயினும் வாந்திபேதி இருந்த காலத்தில் நிலவிய காதல் என்ற நாவலை மொழிபெயர்த்தவரின் பெயர் ஈடித் க்ரொஸ்மன் (Edith Grossman) ஸ்பானிய மொழியும் ஆங்கில மொழியும் தெரிந்தவர்கள் இந்த மொழிபெயர்ப்பு நன்ருய் அமைந்துள்ளது என்று கூறுகிருர்கள்.

மார்குவேஸுக்கு பிரெஞ்சு மொழியும், இத்தாலிய மொழியும் தெரிந்த அளவுக்கு, ஆங்கில மொழி தெரியாது என்கிருர். இவருடைய நாவல்கள் ஜப்பானிய, சுவீடிய, டச்சு மொழிகளில் எல்லாம் பெயர்க்கப்பட்டுள்ளன. எல்லா மொழிபெயர்ப்பாளர்களும் தன்னிடம் சந்தேகங்களைக் கேட்டு எழுதுவதாகவும், பெரும்பாலும் அச்சந்தேகங்கள் எல்லாம் ஒரே விதமானவைதான என்றும் மார்குவேஸ்குறிப்பிடுகிருர்.

தனது நாவலான 'Love in the Time of Cholera'வை ஒரு லத்தீன் அமெரிக்கத் திரைப்பட நெறியாளர் படமாக எடுக்க விரும்பினுல், தனக்கு ஆட்சேபணையில்லை என நாவலாசிரியர் மார்குவேஸ் குறிப்பிடுகிருர்.

இவருடைய ஆருடம் கூறப்பட்ட மரணத்தின் கதை (Chronicle of a Death Foretold) என்ற நாவலை, பிரான்ஸிஸ்கோ ரொஸ்ஸி (Francesco Rossi) என்ற லத்தீன் அமெரிக்க நெறியாளர் திரைப்படமாகத் தந்துள்ளதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

மார்குவேஸ் கூறுகிருர்:

"இலக்கிய அருட்டுணர்வுக்கு, குறிப்பாக கவித்துவ அருட்டுணர்வுக்குப் பழைய ஞாபகங்களும், அந்த நினைவு விருந்துகளும் பெரும் ஊற்றுகளாகும்," (Nostalgia is a great source for literary inspiration, for poetic inspiration).

தனது பெற்றோரின் காதலையும், தனது சொந்தப் படகுப் பயணத்தையும் 'வாந்திபேதி இருந்த காலத்தில் நிலவிய காதல்' என்ற நாவலிலே எழுதியிருக்கும் மார்குவேஸ், தனது பெற்றோர்கள் இந்த நாவலின் சில பகுதிகளைப் படித்திருப்பதாகக் கூறுகிருர். இவருடைய தகப்பனுர் இப்பொழுது இறந்துவிட்டார். தாயாருக்கு இப்பொழுது 84 வயது.

இந்த நாவலின் காலக்களம் 1880 — 1930. கதை நிகழுமிடம் கரீபிய (Carribean) கடற்றுறைமுக நகரம். மூன்று முக்கிய பாத்திரங்கள்.

ப்ளொறென்ரீனே அரிஸ்ஸா (Florentino Ariza) என்ற கவிஞன, கரீபிய நதிப்படகுக் கம்பனி / நிறுவனம் ஒன்றிலே வேலை பார்க்கிருன். ப்ஏர்மினு டாஸா (Fermina Daza) என்ற அழகிய பெண்மீது அவன் மையல் கொள்கிருன். அவர்களிருவரும் ஒருவரோடொருவர் நேரிற் பேசியதோ 100 சொற்கள் மாத்திரமே. ஆனுல் கடிதம் மூலமும், தந்தி மூலமும் அவர்கள் தமது உணர்ச்சி மிக்க காதலைப் பரிமாறிக் கொண்டார்கள். இந்த ரகசியக் காதல் அம்பலமாகியதும் பெண்ணின் தந்தையார் அவளைத் தூர இடமொன்றிற்குப் பல நாள்வரை அழைத்துச் சென்ருர். பின்பு இருப்பிடம் திரும்பியதும் ப்ஏர்மினு தனது காதலனைத் துறந்து, டொக்டர் ஜுவெனல் உர்பினே (Dr. Juvenal Urfino) என்பவரை மணந்து கொள்கிருள்.

காதலன் ப்ளொறென்ரீனே மனத்துயருற்ற போதிலும் மணமாகாமலே இருக்கிருன். இதற்கிடையில் 51 வருடங்களும் 9 மாதங்களும் 4 நாட்களும் கழிகின்றன. டொக்டர் ஜுவெனல் உர்பினே இறக்கிருர். அசைக்கமுடியாத தனது காதலை அரை நூற்ருண்டுக்குப் பின்னரும் தொடரும் ப்ளொறென்ரீனே, அதனை மீண்டும் ப்ஏர்மினுவிடம் எடுத்துக் கூறுகிருன். ஆனுல் அவளோ வீட்டை விட்டு வெளியேறும்படி சீறுவதுடன் தனது முகத்தில் என்றுமே விழிக்கவேண்டாம் எனவும் பணிக்கிருள்.

ப்ளொறென்ரீனே ப்ஏர்மினு மீது உண்மையான காதல் கொண்டிருந்தபோதிலும், பிற பெண்களுடன் 622 நீண்ட காலத் தொடர்புகளும், எண்ணற்ற சரஸ ஸல்லாபங்களும் கொண்டவன் என்பதும் தெரியவருகிறது. அவன் கவிஞனுகையால், தனது கட்டற்ற காதல் உணர்வை நியாயப்படுத்துகிருன். திருமணத்துக்கு முன் காதல் எவ்வாறிருந்தாலும், கட்டியபின் 'கணவனே கண்கண்ட தெய்வம்' என்று நம்புபவள் ப்ஏர்மினு.

ஆக, இந்தக் கதை ஒரு சராசரித் தமிழ்ப் படக்கதை போல் இருப்பதை நேயர்கள் அவதானித்திருப்பீர்கள்.

மேலைநாட்டு இலக்கிய உலகத்திற்கு இந்தப் பண்பாட்டுக் கோலம் வித்தியாசமானது; புதுமையானது. எனவேதான் கப்ரியல் கார்ஸியா மார்குவேஸ் எழுத்துக்கள் அந்தப்பகுதி வாசகர்களைக் கவர்கின்றன போலும்.

மார்குவேஸ், தமது 19 வயதிலிருந்தே உலக நாவல்களைப் படித்து வருகிருர். ப்ரான்ஸ் கஃப்கா (Franz Kafka) எழுதிய Metamorphosis இவர் வியந்து படித்த படைப்புகளில் ஒன்று எனவும் அறிகிருேம.

(இ. ஒ. கூட்டுத் தாபன 'கலைப் பூங்கா' நிகழ்ச்சியில் இடம்பெற்ற பேச்சு) ☐

---

## கலைச்சாரல்

# பாரம்பரியக் கலைகள்

## அவ்வாறே பேணப்பட வேண்டும்

"பாரம்பரியமான கலை வடிவங்கள் எப்பொழுதும் அதன் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படாதவாறு, உள்ளவாறே – பேணப்பட வேண்டியது மிக அவசியமாகிறது." இவ்வாறு 2/9/89 அன்று யாலையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காத்தவராயன் என்ற கூத்தின் ஒரு பகுதியை மேடையேற்றுவதற்கு முன்பாக அந்நாடகத்தின் இயக்குநரான கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார். அத்துடன் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களும் அதே பாணியில் கருத்தைக் கூறியதுடன் காத்தவராயன் கதையின் தோற்றப்பாடு பற்றிய பின்னணியையும் மிக அழகாக எடுத்துக் கூறினர்.

காத்தவராயன் என்ற புராணக்கதையை பிரதிபலிக்கும் இக்கூத்து மரபானது வடமராட்சி, தென்மராட்சி, முல்லைத்தீவு, மன்னுர்ப் பகுதிகளில் நீண்ட காலமாக ஆடப்பட்டு வருகின்ற ஒன்ருகும். அவ்வாறான கூத்து அண்ணுவிமார் (இக்கூத்தைப் பழக்குவோர்) மூலமாக உரிய முறையில் பழக்கப்பட்டு, வருடா வருடம் மேடையேற்றப்படுவதும் வழக்கம். அந்தவகையில் நோக்குமிடத்து பலவேறு பகுதிகளிலும் ஆடப்பட்டு வரும் கூத்து மரபுகளைவிட பல்கலைக்கழக மாணவர்களால் ஆடப்பட்ட காத்தவராயன் கூத்தானது சற்று வேறுபட்டு அமைந்தமையை மிக இலகுவாக அடையாளம் காணமுடிந்தது. அதுபற்றி மேலும் நோக்குவோமாயின் —

இக்கூத்துக்கான பாத்திரங்களை நாடக இயக்குநரே தெரிவு செய்வது வழக்கம்.

குறிப்பாக நடிகனின் அல்லது நடிகையின் குரல்வளம், தோற்றம், நிறம் என்பன இத்தெரிவில் முக்கியமாகின்றன. ஒரு பாத்திரம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதனைக் கருத்

☐ **விஜயன்** ☐

திற் கொண்டே காலங்காலமாக அவ்வாருன தெரிவு இடம் பெறுவது வழக்கம்.

ஆனுல் பல்கலைக்கழக மாணவர்கள் விடயத்தில் பாத்திரமானது கதையுடன் ஒத்துப் போக முடியாத அளவிற்கு தெரிவு இடம்பெற்றமை வருத்தத்திற்குரியது. எடுத்துக்காட்டாக மாரியம்மனுக்கு நடித்த நடிகை உருவத்தில் மிகவும் சிறியவராக இருக்க, மகன் காத்தவராயனுக்கு நடித்தவரோ உருவத்தில் மிகவும் பெரியவராகவும் அமைந்திருந்தார். மாங்காளியின் பாத்திரத்தை நோக்குமிடத்து, தோற்றம் ஓரளவு ஒத்துப் போகக் கூடியதாக இருந்த போதிலும், குரல்வளம் மென்மையாக இருந்ததால் அந்தப் பாத்திரத்திற்குரிய கடுமை பிரதிபலிக்கப்படவில்லை. ஆரியப்பூமாலையாக நடித்தவரின் தோற்றம் பரவாயில்லாமல் இருந்த போதிலும்; குரல்வளமானது அத்தோற்றத்திற்கு மெருகூட்டுவதாக அமையாததும் பிரதான குறைபாடாகவே கொள்ளவேண்டியுள்ளது.

இன்னுேர் வகையில் பார்க்கும்போது இளைய காத்தான் பாத்திரத்தை நடித்த நடிகரின் குரல் வளமும், உணர்வுகளை அவ்வாறே பிரதிபலிக்கும் தன்மையும் பிரமாதமாக அமைந்திருந்தது. கிருஷ்ணர் வேஷம் பூண்டிருந்த நடிகரும் தனது பாத்திரத்தை மிக அழகாகவே செய்துகாட்டினுர். சிவபெருமான் பாத்திரமேற்று நடித்தவர் மிக அழகாக நடித்தபோதிலும், பாரம்பரிய தன்மைக்கு மாருன உடையலங்காரம் அவரது திறமையினைக் குறைத்து மதிப்பிட வைத்தது. குடிமக்களாக வந்தவர்களுள் வயோதிபராக வந்தவர் சிறந்த முறையில் நடித்தார். அந்த வகையில் மேற்கூறப்பட்ட நடிகர்களுக்கு சிறப்பிடமுண்டு.

காத்தவராயன் கூத்தில் பல்வேறுபட்ட உணர்வுகளையும் பிரதிபலிக்கும் ஓசைகளும், நளினங்களும், முன் பின்னுக நகரும் பாணியும் பிரதான இடத்தை வகிக்கின்ற அம்சங்களாகும். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கூத்தில் சில நடிகர்கள் பாடும் முறை சரியாக இருந்தபோதிலும், நளினமானது எல்லாக் கட்டங்களிலும் ஒரே மாதிரியாக அமைந்திருந்தது. குறிப்பாக மாரியம்மன் பாத்திரத்தில் இதனைத் தெளிவாக அடையாளம் காணமுடிந்தது. இசையைப் பொறுத்து பிரதான இடம் வகிக்கும் உடுக்கு ஓசைக்கு மாருக மிருதங்க ஓசை முன்னணிப்படுத்தப்பட்டமை ஒரு செயற்கைத் தன்மையைக் காட்டியதுடன், சில கட்டங்களில் 'தாளலயம்' என்ற இன்னுேர் நாடக மரபையும் உள்வாங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவற்றைவிட காத்தவராயன், தாயாரிடம் தான் மணம்புரிவதற்காக அனுமதிகேட்கும் பாடல் அசல் பக்திப்பாட்டைப்போல் அமைந்திருந்தது. இது எந்தக் காத்தவராயன் கூத்து மரபையும் ஒத்திருக்கவில்லை.

காத்தவராயன் பாத்திரத்திற்கு நடித்தவர் அதிக

(11ஆம் பக்கம் பார்க்

## வியாபாரச் சந்தையில் விலைபோகும் மந்தைகள்

கன்னிமகளுக்கும், காசுபதவிக்கும்
கலயாணம் பணணியே வைப்பார்! — இவர்
காசுபணத்தையே மொய்ப்பார்! — நன்கு
எண்ணிப் பணத்துக்கும். எங்கள் மகனுக்கும்
ஏற்றதிருமணம் என்பார்! — இவர்
எச்சிற் பணத்தையுந் தின்பார்!

வேளைவரும்; அது நாளை வரும் என
வேண்டிய சோதிடம் பார்ப்பார்! — இவர்
வீணிலே வாழ்க்கையைச் சேர்ப்பார்! — காதற்
காளை மனதையும், கன்னி மனதையும்
கண்டு உணரவே மாட்டார்! — அறிவுக்
கண்ணிழந்த என் நாட்டார்!

காசு பெரிதில்லை; காதல் பெரிதென்றே
காட்டிடும் ஆணிங்கு இல்லை! — அட!
காசுபணம் அவர் எல்லை! — முன்னர்
தூசுபணமெனத் துள்ளி உரைத்தவர்
தூர விலகுவர் பின்னே! — அவர்
தூக்கத்திலுங் காசு பொன்னே!

சீதனமே அவர் வேதன மென்றுற்
சிந்தை குமுறுது பெண்ணே! — இந்தச்
"சின்ன" மனிதரின் முன்னே! — அந்தப்
பாதகரைக் கண்டு. பாடல் வெடிக்குது;
பாருலகத தினில் இன்று! — அந்தப்
பாதகஞ் சாவது என்று?

வாழ்வு நமக்கொரு வாச லமைத்தது;
வாழும் நெறிகளைச் சொல்லி! — அதில்
வைததனர் சீதனக் கொள்ளி! — அது
தாழ்வு தருமெனத் தமிழு முரைத்தது;
தக்க முறைகளி லிங்கு! — இவர்
தப்பிப் பிழைப்பது எங்கு?

பேசிக் கிழித்ததும். பேப்பர் படித்ததும்
பேணியதா உயர் நன்மை? — இவர்
பீடைக ளென்பதே பேருண்மை! பொய்
பூசிக் கிடப்பதும். புளுகி நடப்பதும்
புன்மதி யாளரின் போககு! இந்தப்
புழுக்களை நீதினந் தாக்கு!

— ஜெ. இ ஜெயசீலன் □

## இராமனே இராவணனாய்

நான் மிகவும் பலவீனப்பட்டுப் போயுள்ளேன்.
என்னை யாரும் கேள்விகள் கேட்டுத்
தொந்தரவு செய்யாதீர்கள்.
நூலிழையில் தொங்கிக் கொண்டிருக்கிற எனது
இதயம்

எந்த நேரமும்
விழுந்து வெடித்துவிடக் கூடும்.

அசோகவனங்கள் அழிந்துபோய் விடவில்லை.
இந்த வீடே
எனக்கான அசோகவனமாயுள்ளது.
ஆனால்
சிறைப்பிடிததது இராவணனல்ல; இராமனேதான்.

இராமனே இராவணனாய்
தனது அரசிருக்கையின் முதுகுப்புறமாய்
முகமூடிகளை மாற்றிக் கொண்டதை
பார்க்க நேர்ந்த கணங்கள் ...
இதயம ஒருமுறை அதிர்ந்து நின்றது.

இந்தச் சீதையைச் சிறைமீள வருபவர் யார்?

அசோகவனங்கள் அழியாது
இன்னும்,
எததனை காலத்திற்கு? —

— செல்வி □

### அன்னை நிலம்

இனிய தேசமே
உன் இளமையை அறிவை
இழந்தாய்:
மரங்களைக் கொடிகளை
இழந்து பாலை நிலமாய்
வரண்டு போனாய்.
அன்னை நிலமே
உன் கரங்கள்
எம்மை அணைக்கட்டும்.

— புதிய ஜீவன் □

## தூவானம்

○ நவீன சிற்பக் கண்காட்சி
○ கவின் கலை மன்ற நிகழ்ச்சியில்......

கடந்த இரண்டு கிழமைகளுக்குள் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் சில கலை, இலக்கியத்துறையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுள்ளன. அவற்றில் இரண்டைப் பற்றிய குறிப்புகளை இங்கு தருகிறேன்.

யாழ். பல்கலைக்கழகத்தில் 8ஆம் திகதி தொடக்கம் மூன்று நாட்களாக, சிற்பக் கலைஞர் ஐ. விஸ்வலிங்கத்தின் சிற்பக் கண்காட்சியொன்று பல்கலைக்கழகக் கலை வட்டத்தின் ஆதரவில் நடைபெற்றது.

சிற்பக்கண்காட்சி எமது பிரதேசத்துக்குப் புதுமையான ஒன்று; அந்தவிதத்திலும் இது முக்கியத்துவம் பெறுகிறது, கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட விஸ்வலிங்கம் தென்னிலங்கையில் — சிங்களவர் மத்தியில் — சிறப்பான இடத்தைப் பெற்றிருப்பவர்; தனது ஜீவனோபாயமாகச்சிற்பககலைத் துறையையே நம்பி இருப்பவர். அவரது சிற்பங்கள் 31 தலைப்புகளில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. தற்போதைய நாட்டுச் சூழல் காரணமாக, தென்னிலங்கையிலுள்ள அவரது நல்ல சிற்பங்கள் பலவற்றை இங்கு காட்சிக்கு வைக்க முடியவில்லையெனவும் தெரிகிறது.

மரத்தைத் தனது ஊடகமாகக் கொண்டு பகுதி அரூபத் தன்மையுடன், சிற்பங்களை இவர் உருவாக்குகிறார். சில சாதாரணமானவை; ஆச்சரியத்தை எழுப்பாதவை. ஆனால் பெரும்பாலானவை அவரை ஒரு தேர்ந்த கலைஞனாக எம்முடன் பரிச்சயப்படுத்தி வைக்கின்றன. நீட்டல், குறுக்கல், சிதைத்தல் போன்றவற்றை தனது வெளிப்பாட்டு மனோபாவத்துக்கு ஏற்ப ஒத்திசைவுடன் கையாண்டு, அவர் படைத்துள்ள சிற்பங்களில் காவடியாட்டம். பாம்பாட்டி, ஒய்யாரம், பயணி, ஆண்டி, முதுமை, தாயுப சேயும், பெண் போன்றவை என்னை மிகவும் கவர்ந்தன.

முகங்கள் என்ற தலைப்பில் அமைந்த பல செதுக்குத் துண்டுகளில் தேர்ச்சியான கலைத்திறனைக் காணமுடிந்தாலும், சிங்கள மக்களின் முகமூடிகளின் சாயலை அவை கொண்டிருப்பதாகவும் தோன்றுகிறது. இவற்றிலும் வேறு பல சிற்பங்களிலும், சிங்களக் கலாசாரத் தாக்கத்தையே காணமுடிகிறது. தனது வாழ்வின் பெரும்பாலான காலத்தைச் சிங்கள மக்களிடை அவர் கழிக்க நேர்ந்தமை, இதற்குக் காரணமாகலாம். தற்போது வட பிரதேசத்தில் வசித்து வரும் இக்கலைஞர் தமிழ்ப் பண்பாட்டம்சங்களைக் கொண்ட சிற்பங்களை அதிக அளவில் படைக்கவேண்டுமென்ற அவா பலரிடம் எழுந்ததை, அவதானிக்க முடிந்தது. கலைஞர் விஸ்வலிங்கம் இதனைக் கவனத்திலெடுப்பாரென நம்புகிறேன். முன்னோடி முயற்சியாய் அமையும் இக்கண்காட்சியை ஒழுங்கு செய்துநடத்திய கலை வட்டத்தினர் பாராட்டிற்குரியவர்கள்'

9ஆம் திகதி காலை, யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில், பல்கலைக்கழக நுண்கலைத் துறையிலுள்ள கவின் கலை மன்றத்தின் 'நாதவாஹினி' மலர் வெளியீடும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி தனது உரையில் முக்கியமான கருத்துகள் சிலவற்றைச் சொன்னார். "இசையை அரசிக்கும் பண்பு, எமது பண்பாட்டு வாழ்வினுள் இன்னும் நன்கு வந்து சேரவில்லை. நுண்கலைத் துறையில் பயில்பவர்கள்கூட வேலை வாய்ப்பிற்குரிய சான்றிதழைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டே, பயில்கிறார்கள். இந்நிலை — மனோபாவம் — மாறினால் தான் இத்துறையில் நாம் முன்னேறலாம்" என்று அவர் சொன்னார். அத்தோடு இலங்கையில் கர்நாடக சங்கீதத்தின் வரலாறு பற்றிய கருத்தரங்கொன்றையும், இங்கு முன்பு பயின்று சென்ற கலைஞர்களின் இசை — பரதநாட்டிய நிகழ்ச்சிகளை இரண்டு நாட்களுக்குத் தொடர்ந்து நிகழ்த்த எண்ணியிருந்ததாகவும், அது நிறைவேறவில்லையென்றும் தெரிவித்தார்; ஆனால் காரணத்தைத் தெரிவிக்கவில்லை, அத்துடன், ஓவியம் சிற்பம் போன்ற துறைகளும் நுண்கலைப் பீடத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். இங்குதான் சில கேள்விகள் எழுகின்றன. இவர்கள் இன்னும் கொஞ்சம் அக்கறை எடுத்திருந்தால் கர்நாடக சங்கீதம் பற்றிய கருத்தரங்கையாவது நடத்தியிருக்க முடியாதா? ஐந்தேர் ஆறு வருடங்களாக சிவத்தம்பி அவர்கள் நுண்கலைத்துறைத் தலைவராகஇருக்கிறார். இக்காலகட்டத்தில் அவர் ஆக்கரீதியான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தால் ஓவியம், சிற்பம் போன்ற பாடநெறிகளை அங்கு ஆரம்பித்திருக்க முடியாதா? நானறிந்தவரை இரண்டு மூன்று ஆண்டுகளின் முன்னர். பகுதிநேர ஓவிய விரிவுரையாளர்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சையொன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது; அ. மாற்கு போன்ற எமது முதிய ஓவியர்களும் அந்த நேர்முகப்பரீட்சைக்குச் சென்றிருந்தனர். இன்றுவரை அது பற்றிய எந்த விபரமுமே வெளிவரவில்லை.

எமது ஓவிய, சிற்பக்கலைஞர்களின் ஆக்கங்களை நுண்கலைத்துறை பணம் கொடுத்து வாங்கி, அக் கலைச் சேகரிப்புக்களைக் கொண்ட தனிக் காட்சி அறையொன்றை ஆரம்பிப்பதும் நல்லது. இதன் மூலம் இத்துறைகளும் இத்துறைக் கலைஞர்களும் பரந்த முக்கியத்துவத்தினைப் பெறும் சாத்தியமேற்படும்.

உண்மையான கலை ஈடுபாடும் அக்கறையும் இருந்தால் இவற்றைச் செய்வது கடினமானதல்ல. ஓவியம் எமது பகுதி மக்களிடையில் குறிப்பிடத்தக்க கவனத்தைப் பெற்றுவிட்டது. தற்போது நவீன சிற்பமும் அறிமுகப்படுத்தப்பட்டு வரவேற்பைப் பெறுகிறது. இச் சூழ்நிலையிலாவது பல்கலைக் கழகம் குறிப்பாக நுண்கலைத்துறை ஆக்கரீதியில் செயற்பட வேண்டுமென்பதே, இப்பிரதேசக் கலை வளர்ச்சியில் இதயபூர்வமான அக்கறை கொண்ட கலைஞர்களதும் கலை ஆர்வலர்களதும் வேண்டுகோளாக இருக்கிறது.

அன்றைய இறுதி நிகழ்ச்சியாகக் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. கர்நாடக இசையில் போதிய அறிவில்லாதவனாக இருந்த போதிலும் அங்கு இடம்பெற்ற பாட்டுக்களை என்னால் இரசிக்கமுடிந்தது. குறிப்பாக, பண்ணிசை வழங்கிய இரு மாணவியரின் குரல் வளம் மனதைப் பிணித்தது. 'இசையால் வசமாகா இதயமெது' என்று சும்மாவா சொல்கிறார்கள்? மனித புராணம் என்ற தலைப்பில் இசைத்தளிக்கப்பட்ட வாத்தியக் கூட்டிசை நிகழ்ச்சி, இனிய அனுபவத்தைத் தந்தது; பலரினதும் வரவேற்பை அது பெற்றது. இந்திய வானொலியில் ஒலிபரப்பாகும் 'வாத்ய பிருந்தா' போன்ற நிகழ்ச்சிதான் அதுவென்றாலும், இங்கு இத்தகைய நிகழ்ச்சிகள் புதியவை. இத்துறையிலான சொந்த முயற்சிகள வரவேற்கப்படத்தக்கவையே மனித புராணத்தையும், இதுபோன்ற வேறு சிலவற்றையும் சேர்த்து ஒரு செம்மையான இசை நாடாவைக் கவின்கலை மன்றம் வெளிக்கொண்டு வருமானால், இசை இரசிகரின் பாராட்டுதல்களை அது மேலும் பெற்றுக். கொள்ளும்,

இறுதியாக, கசப்பானதொரு செய்தி. இனிமையான இசையில் ஒன்றி இரசித்துக் கொண்டிருந்த வேளை, மண்டபத்தின் பின்புற மூலையிலிருந்த 'சிறு கும்பல்' அடிக்கடி கையொலி எழுப்பியவாறு இடையூறு செய்து கொண்டிருந்தது. நிகழ்ச்சியை நடத்துவோரையும் அதை இரசிக்கக் கூடியிருந்த இரசிகர்களையும் அவமதிக்கும் வகையில், இச் சிறு மாணவர்குழு ஏன்தான் இப்படி நாகரிகமற்று நடந்து கொண்டதோ? □

நீலாம்பரன்

**திசை** THISAI

**சிறுகதைப் போட்டி மூன்றாம்பரிசுக்கதை**

# முதுகச் சொறியுங்கோ!

போட்டிக்குச் சிறுகதை கேட்டிருக்கிறார்கள். என் எழுத்துக்களைப் பற்றிச் சில விமர்சகர்கள் கூறியிருப்பது வெறும் முகஸ்துதிதானா — முதுகுச் சொறியல் தானா என்று நானே பரிசோதித்துக் கொள்ள ஒரு நல்ல சந்தர்ப்பம்.

"நீங்களும் பங்கெடுக்கிறீங்களா?" என்று ஜோஸப்பிடம் நேற்றுக் கேட்டேன்.

'நானும் பங்குபத்றதா?' என்று என்னைக் கேட்பதுபோல சிரித்தார் அவர். நல்ல அநுபவசாலி. அந்த அநுபவமே பரிசை அவர் தலையில் கட்டி விடும். என்றாலும், தானும் இதில் பங்குபற்றுவதை ஒரு சிறுபிள்ளைத்தனமாக அவர் கணக்கெடுத்ததைப் போலிருந்தது அந்தச் சிரிப்பு.

கடைசியில் அவர் இப்படித் தான் சொன்னார். "இது வரைக்கும் ...... தீர்மானம் இல்ல! ... இனிமேலும் ...... தீர்மானம் வராம இல்ல!..."

அல் அஸூமத்

சரி, எனக்கு அப்படிப்பட்ட பிரஸ்டிஜ் இல்லை; நான் பங்குபற்றப் போகிறேன்.

எந்த விஷயமாகவும் இருக்கலாமாம்; ஓப்பன் வீஸா! அதனால் யாருமே கட்டுரை எழுதாமல் கதையே எழுத முடியும். நிஜமான உயிர்ப்புகள்! ...... இப்போது கைலாஸும் இல்லை; கானாகூனாவும் இல்லை. காசிதான் வாசியாயிற்றே! ......

ஆனால் பத்துப்பக்கங்களுக்கு மேல் வேண்டாமாமே! கொஞ்சம் கூடக் குறையப் போனால் திட்டாகி விடுமோ? ஐந்து வருஷமென்று பெட்டி தூக்குபவர்கள் கூடத் தங்களின் பெட்டி வருகிற மட்டும் மலர்வளையம் விற்கவில்லையா? நடுவர்கள் இரக்கப்பட்டே ஆகவேண்டும். ஒரு பக்கக்கதையைப் பத்துப் பக்கத்துக்கு வளர்த்தாலோ இருபது பக்கக் கதையைப் பத்துப் பக்கத்துக்குச் சுருக்கினாலோ என்று தெரியாதவர்களா, நடுவர்களாக இருப்பார்கள்?

நல்ல தீமாகப் போடவேண்டும் — இதுகாரிகிடத்தீம் இல்லை, சரியான சிறுகதைத் தீம் என்று ஒத்துக்கொள்ளும்படி. எது நல்ல தீம்? ஈழப் பிரச்சினை? — அது மார்க்கட்டில் மலிந்து போன பொருளாக இருக்கிறது. அகில உலகமும் அதில்தான் 'ட்றேட் ஸோன்' நடத்துகிறது ...... தொழிலாளர் பிரச்சினை ? ...... ம்ஹூம் ! நாட்டிலே தொழிலாளர்களே இல்லையென்ற அளவுக்கு இப்போதே குவிந்துவிட்டது !...... காதல் ? ... மண்ணிலேயே பற்றில்லாத பயல்களுக்குக் காதல் ஒரு அவசரமா ? ......

அப்படியென்றால் கல்வி?...... சரியான டொக்யூமெண்டறி! ...... வேண்டாம்! பல்கலைக் கழகங்களை இருபத்தோராம் நூற்றாண்டு வரையில் ஊறப் போட்டு விடுவார்கள்! இலக்கியப் பிரச்சினைதான் இனி பாக்கி! .... அதுவும் வேண்டாம். யாராவது ஒருவன் தான்தான் கைலாஸின் ஆவி, கானாகூனாவின் ஆவி என்று கிளம்பப் போகிறான்! இப்போதே ஒவ்வொரு வரிக்கு மாக ஒவ்வொருத்தன் பேனையைத் தூக்கப் பார்க்கிறான்! ......

சரி, தீமுக்குப் பிறகு வரலாம். கதையை வளர்ப்பது எப்படி?... .. நனவோடை உத்தி? ...அதைப்பற்றி இன்னும் ஒரு மனிதனுக்குமே தெரியாத மாதிரித் தெரிகிறது. தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளும் சிலர் கூட, அந்தத் தனிமனிதக் குப்பைத்தனம் சமுதாயத்துக்குத் தேவையில்லை என்கிறார்கள்...... ப்ளேஷ் பேக்?... .பாவம் நடுவர்கள்; லிங்கம் பெயர்ந்த வரலாறு மாதிரி நாட்டை விட்டே ஓடிப் போய் விடுவார்கள்! .....

எந்த நடையாக இருந்தாலும் முடிவிலிருந்து தொடங்கினால் எப்படி?......அப்புறம் முடிவில் போய் ஒன்றுமில்லாமற் போய் விட்டால்?...... எந்த நடையை எப்படித் தொடங்கினாலும் சரி, பெட்ரோலுக்கு மேல் தீக்குச்சியை உரசி வீசியமாதிரி பக பக பக வென்று பற்றி எரிந்து போய்த் தண்ணீரை ஊற்றிய மாதிரி டப்பென்று அணைந்து போக வேண்டும்!

யாவும் கற்பனை என்று போடுவதா? அப்படிப் போட்டால் யதார்த்தத்தைக் கேலி செய்த மாதிரிப் போய் விடுமே! யாவும் கற்பனை அல்ல? .....அப்படி ஒன்றைப் போடப் போய் ஜெயிலில் யேசுராசா பிரம்போடு நிற்கப் போகிறார்! கற்பனை அல்ல என்று போட்டால்? கற்பனை அல்ல என்றால் அதை ஏன் போட்டும் காட்ட வேண்டும்— 'என் கவிதை நெருப்புக் கவிதை' என்று தப்படிக்கிற மாதிரி... சுபமாவே விட்டு விடுவோம்.

முற்போக்காளர்கள், 'யதார்த்தப் படைப்பு' என்று சொல்ல வேண்டும். நற்போக்காளர்கள், 'இதொன்றும் புதியதல்ல; என்றாலும் பரவாயில்லை!' என்றாவது சொல்ல வேண்டும். பிற்போக்காளர் ஒவ்வொருவரும், 'நான் இதை விட நன்றாக எழுதியிருப்பேனே!' என்று அடிக்கடி எரிய வேண்டும்! ஒரு காஃப்கா, மௌனி, சுந்தரராமசாமி, மாமல்லன் மாதிரி இருக்க வேண்டும். நம்நாட்டு பாஷையில் சொன்னால், ஒரு தளையசிங்கம், தெளிவத்தை, உமா, ரஞ்சகுமார் மாதிரி இருக்க வேண்டும். பிறநாட்டு பாஷையில் சொல்லும்போது, குமுதத்துக்கு வந்து கெட்டுப் போகாமல் இருந்திருந்தால் பிரபஞ்சனையும் சொல்லலாம் தான்... வேண்டாமப்பா, ஒன்றுமே வேண்டாம்! நான் நானாக இருந்தால் போதும். புதுமைப்பித்தனின் அந்த முட்டாள் வேணுமாதிரி நானும் போய்விடக் கூடாது!

சட்! நானே அன்று மேடையில் பேசினேன், பேனையை உருட்டிக்கொண்டே எழுதுவது எதை என்று பிச்சையெடுத்துத் திரியக்கூடாதென்று! கலண்டர்க்கவிகளுக்கும் எனக்கும் பிறகு என்ன வித்தியாசம்?......

இந்த மூட்டே இப்படித்தான் — எழுத வேண்டிய நேரத்தில் பெண்டாளப் போகிற மாதிரி! பஸ்ஸில் போகும் போதெல்லாம் என்னென்ன வகையாக மூடுவருகிறது! கக்கூஸில் இருக்கும்போதுதான் அருமையாக வந்து தொலைக்கும்! வெளியே வந்து, "இந்த 'ஷவிங் செட்ட இங்ஙன வச்சனே, எங்க?" என்பதைப்போல் ஒன்றால் மனைவியோடு கொளுவுவதோடு அதுவும் பறந்து விடும்! கக்கூஸுக்குப் போனால் நோட்புக்கோடு போகும்படியாகவா அது பொறுமையாக வந்து



தொலைக்கிறது! ... வெள்ளைக்காரன்தான் சரி; அங்கேயே தாள் இருக்கும்! எனக்குக் கதை எழுதவே தாள் இல்லை; கக்கூஸில்தான் வைக்கப்போகிறேனா?

நேற்றே முந்தாநாளோ, நல்ல ஒரு ப்ளொட், அதுவும் கனவில் — கனவில் வந்தது. அருமையான தீம்! என்ன அது?... ... ம்? .. .. அது ... அது? ...... மகன்மார் காதலிக்கிற கதையா? கிழிச்சான்கள்! ...... வீட்டுக்காரன் கூலியையும் உயர்த்தி இரண்டு வருஷம் அதிகப்படியான முன்பணமும் கேட்ட கதையா?... இல்லையே! அதைத்தான் வட்டிக்கு வாங்கிக் கொடுத்தாயிற்றே?...... ஜே.வி.பி. சரணடைவது மாதிரியா கனவு கண்டேன்?...... நோ நோ நோ!... ..

சனியன்! சமயத்துக்குவராது! சுப்பரான ஒரு ப்ளொட் அது. இனித் தேதி முடிந்த பிறகுதான் அது நினைவுக்கு வரும் — நமது விமர்சனக்காரர்களுக்கு மேடையை விட்டு இறங்கிய பிறகு, 'தான் அப்படிப் பேசியிருக்கக் கூடாதே,' என்று ஞானோதயம் வருகிற மாதிரி! ...... ஒரு தமிழனோ முஸ்லீமோ ஜனாதிபதியாக வந்தமாதிரியோ? ...... இல்லையே, இல்லையே!......

சிலநேரங்களில் என் மனைவிக்கு நல்ல நல்ல தீம்கள், யோசனைகள் வரும்.

"சுற்றிவரப் பிணங்களாகக் கிடக்கும்போது உங்களுக்கு இலக்கியம்!" என்ற மாதிரி ஒரு ராத்திரி இரண்டு மணிக்கு முணுமுணுக்கிறாள்! நான் கூடக் கனவில் பிதற்றுகிறாள் என்று முதலில் நினைத்தேன். இவளொன்றையும் தீவிரமாக யோசித்துப் பேசுபவள் இல்லை. இரவானபின் என் வாசிப்பும் எழுத்தும் இவளுக்குச் சில வர்மங்களில் பிடிக்கிறதில்லை. அதிலும் டீ.வி. நிகழ்ச்சி முடிந்தபிறகு படுமோசம். நான் வேறு பாவி, கட்டிலில் இருந்துகொண்டுதான் எழுதுவேன், வாசிப்பேன் — நெருப்பில் சீனி போட்ட மாதிரி. இதனால் தெறிக்கும் ஏமாற்றமோ ஆத்திரமோதான் இப்படி உருவம் கொள்ளும்.

அவளுக்கு அப்போதே சொல்லியிருக்கக்கூடிய மறுமொழிகூட இப்போதுதான் வருகிறது!

மழை; வெய்யில்; வதை; பசி; கிழிசல்; வறுமை. ஒரு பிள்ளை பிணமாகக் கிடக்கிறது; கணவன் ஆஸ்பத்திரித் திண்ணையில். கைக்குழந்தை பட்டினியில் துடித்தழுகிறது. காய்ந்த முலை. உலகத்தில் புட்டிக்குரிய பாலே இல்லை. அவள் என்ன செய்கிறாள்? குழந்தையை வாரி அணைத்துக் கண்ணீர் விட்டுக் கதறித் தூங்க வைக்கிறாள் —தாலாட்டில்! இது இலக்கியம் வளர்ந்த வரலாறு. நாங்களும் தாய் வழிதானே? நான் போய் ஒரு பணக்காரிக்குப் பிறந்திருக்க முடியுமா?

இதை இவளுக்குக் கூறி இவள் வாயை அடைக்க வேண்டும். இப்போது வேண்டாம், ஆண்டவனே! எனக்கு இப்போது கதை முக்கியம்.

நல்ல தலைப்பாக வைக்க வேண்டும் — ஒரு படிமமாக, ஒரு குறியீடாக. முழுக்கதையையும் பிழிந்தெடுத்துப் 'பில்ஸ்' செய்தது போல!

துள்ளல், எள்ளல், கொள்ளல் என்று தனித் தலைப்பு நன்றாயிருக்குமா? அல்லது அரசத் துள்ளல், மக்கள் எள்ளல், மாட்டிக் கொள்ளல் மாதிரியாக இரட்டைத் தலையங்கம் நன்றாயிருக்குமா? அல்லது இமாதிரியோ நெல்லை மாதிரியோ நீண்டவை? காலங்காலமாக நினைத்தெண்ணிய காரியவினை? ... ...... ஒரே ஓர் வான்கோழிப் பறவை கானவான் மயிலாக ஆகிறது? ... அல்லது வினாக்குறி, ஆச்சரியக்குறி, ஒரு வட்டம்?...... நீ. வா, போ, தா, தீ, தூ, ஆ, ஊ ?... ......

இந்தக்கதையின் தலைப்பைப் புதுமையாக வைக்க வேண்டும். புதுமை...! புதுமை!... கல்யாணக்கதையானால் சாவு வீடு என்று வைக்கலாமே! ஹா! ... பிரமாதம்! தலையங்கத்தை வைத்தே நடுவர்களும் விமர்சகர்களும் பத்துப் பதினைந்து மணித்தியாலம் பேசி விடுவார்கள்!...... ஹப்பாடா!... ஒரு மாதிரியாகத் தலையங்கம் வந்து விட்டது! இனித் தீமும் வந்து விடும்! பேனையை உருட்டிக் கொண்டே யோசித்தால் ஏன் வராமல் போகிறது! அகிலன், நாபா, லக்ஷ்மி ஜன்மங்களுக்கு வந்ததென்றால், வாரிசுகளுக்கு வராமலா போகும்?

இந்த நடை . முக்கியமாயிற்றே!...... யாருடைய நடை நல்லது?......

யார்யார் பரிசீலிக்கப் போகிறார்கள் என்று தெரிந்தால் அவர்களுக்குத் தகுந்த மாதிரி எழுதி விடலாம். மூப்போ இருந்தால் மெய்யுள் நடை; யேசுராசா இருந்தால் மௌனி நடை; காசியானால், ஜேர்மன் பாஷையைத் தமிழில் கொண்டு வந்த மாதிரி நடை; கோகிலாவானால் நாலைந்து கேள்வி நடை; (அதை நனவோடை என்று கூட விமர்சிப்பார்கள்!) ஜீவா இருந்தால் ஆக்ரோஷ நடை; தெளிவத்தையானால் பேச்சு நடை; முருகையனானால் விஞ்ஞான நடை ...யாரென்று தான் சரியாகத் தெரியவில்லை!

போட்டி நடத்துபவர்கள் நடுவர்களையும் அறிவித்து விட்டால் என்ன?......

......நாளைக்கு எனக்கு எட்டாயிரம் ரூபா ஓடர் ஒன்று கிடைக்க விருக்கிறது......

குடும்பக் கதையை விரும்புபவர் காதல் கதையை விரும்புவாரா, டைவஸ் கதையை

(11ஆம் பக்கம் பார்க்க)

# சிந்தனை மேடை

**எஸ் சண்முகதாசன்**

கட்டுரையின் ஆரம்பத்திலேயே திரு. சித்தார்த்தன் அவர்கள் உயர்தர வகுப்பு மாணவர்கட்கு பாடசாலை அவசியமில்லை என்று கூறியுள்ளாரே தவிர மாணவர்கட்கு பாடசாலை அவசியமில்லை என்று கூறவில்லை. 14-7-89 அன்று கட்டுரை எழுதிய திரு. குகரூபன் அவர்கள் மாணவர்கட்கு பாடசாலை அவசியம் என்று கூறியுள்ளாரே தவிர உயர்தர வகுப்பு மாணவர்கட்கு குறிப்பாக ஆண்டு 13 மாணவர்கட்கு எந்த வகையில் முக்கியம் என்பதை தலையங்கத்தில் தவிர வேறு எந்த ஒரு இடத்திலும் கூறவில்லை. 30 06-89 அன்று கட்டுரை எழுதிய சுமந்திரனும் இவ்வாறே கூறியுள்ளார்.

## சட்ட திட்டம்

பாடசாலையில் உள்ள சட்ட திட்டங்கள், ஒழுங்கமைப்புகள் ஆண்டு 11 (வகுப்பு 10) வரைதான் அமுல்படுத்தப்படுகின்றன. உயர்தர வகுப்பு மாணவர்கட்கு எந்த ஒரு பாடசாலையிலும் அமுல்படுத்தப படுவதிலலை. அமுல்படுத்தவும் முடியாது. பத்தாம் வகுபபில் பழகிய ஒழுககம், கட்டுப்பாட்டைக் கொண்டு தான் அவன் உயர்தர வகுப்பில் நடந்துகொள்கிறான்.

எந்த ஒரு பாடசாலையில் உயர்தர வகுப்பு மாணவர்கட்கு அதிபர் பிரம்பு கொண்டு அடிப்பது அல்லது "தலை மயிரை ஒழுங்காக வெட்டு" என்றோ வேறு எந்தக் கட்டுப்பாடாவது விதிக்கப்படுகின்றது என்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

ஆகவே 10ஆம் வகுப்பு வரை பழகிய பழக்கம், ஒழுக்கம்தான் வாழ்க்கைவரை பயன்படுகிறது. அதைவிட உயர்தர வகுப்பில் நாம் புதிதாக ஒன்றும் பழகுவதில்லை.

## புறக் கருமங்கள்

விளையாட்டுப் போட்டிகள், சமய விழாக்கள் போன்றவற்றில் எந்த ஒரு மாணவனும் 10 ஆம் வகுப்பு வரையே மிக ஆர்வமாகப் பங்கு பற்றுவான். பரீட்சை நெருங்குவதனாலும், வேறு உளவியல் காரணங்களினாலும் உயர்தர வகுப்பு மாணவர்கள் பங்குபற்றும் நாட்டம் மிகக் குறைவு.

ஐந்து அல்லது ஆறுபேர் பங்குபற்றும் ஓட்டப்போட்டி இருவர் அல்லது மூவருடன் நடைபெறுவது இதற்கு ஒரு சிறந்த சான்று.

## காரணம் வேறு

இதைவிட ஒரு சில மாணவர்கள் நன்றாகப்படிக்கக் கூடியவர்கள். ஒவ்வொரு நாளும் தவறாமல் ஒழுங்காக பாடசாலை செல்வர். இது நிச்சயமாக கல்வி, ஒழுக்கம் பயில அல்ல. மாணவர் தலைவர், பாடசாலைக் கழகத் தலைவர், செயலாளர் போன்ற பதவிகளைத் தாம் பெறும் பொருட்டேயாகும். ஒழுங்காகப் பாடசாலை செல்லும் மாணவர்களுக்குத்தான் இப்பதவிகள் கொடுக்கப்படுகின்றன, வேறு ஒரு திறமையும் அவதானிக்கப் படுவதில்லை. இவர்களை வைத்துக் கொண்டு பாடசாலை அவசியம் என்று சொல்வது பிழை. இதைவிட பெற்றோர்களின் கரைச்சல் தாங்காது பாடசாலை செல்வோர் வேறு சிலர். இவற்றை எல்லாம் விட இன்று வீட்டில் இருப்பதை விட பாடசாலையில் இருப்பது "பாதுகாப்பு" என்று மாணவர்கள் கருதுகின்றனர்.

## இட நெருக்கடி

தனியார் கல்வி நிறுவனங்களில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று குகரூபன் சுட்டிக்காட்டியுள்ளார். இது எதைக்காட்டுகிறது? மாணவர்கள் பெரும்பாலும் தனியார் கல்வி நிறுவனங்களை நாடுகிறார்கள் என்றும, இதைக்கூறிய ஆசிரியரும் தனியார் கல்வி நிறுவனத்தில் இருந்து வந்தவர் என்பதையுமே காட்டுகிறது.

மாணவர்கள் கெட்டுப் போவதற்கான வேறு பல வழிகளையும் திரு. குகரூபன் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார். ஆனால் படிக்க வேண்டுமென்று நினைக்கும் மாணவன் எந்தத் தொலைக்காட்சிகளினூடும் படித்தே தீருவான். அண்மைக் காலங்கள் குண்டு வெடித்த வீடுகளில் இருந்தே ஏன் பூஸா முகாமில் இருந்தே பரீட்சை எழுதி பல்கலைக்கழகம் சென்றவர்களும் உண்டு. பாலையும் தண்ணீரையும் கலந்து வைப்பினும் அன்னப் பட்சி பாலைமட்டும் குடிக்குமாம் என்பதை இவ்விடத்தில் நினைவு படுத்தல் பொருத்தம் என நினைக்கிறேன்.

## செய்முறைகள்

உயர்தர வகுப்பு மாணவர்கட்கு மிக மிக அவசியமான செய்முறைப்பயிற்சிகள் தனியார் கல்வி நிறுவனங்களில் செய்து காட்டப்படுவதில்லை தான். அதேநேரம் தற்போது அவை பாடசாலையில் செய்யப்படுகின்றனவா என்றால், அதுவும் இல்லைத்தானே? செய்முறைப் பரீட்சை எப்போது நிறுத்தப்பட்டதோ அதன் பின்னர் செய்முறைகள் பாடசாலைகளில் ஒழுங்காகச் செய்யப்படுவதில்லை என்பது தான் உண்மை நிலை.

## பாடத்திட்டம்

ஒரு சில மாணவர் குழுக்களின் குழப்படிகளினால், முழு தனியார் கல்வி நிலையங்களையும் பிழை சொல்வது பொருத்தமானதலல. எந்த ஒரு மாணவனும் "நான் பாடசாலையில் கற்றுத்தான் பாடத்திட்டம் முடித்தேன்" என்று சொல்லட்டும் பார்க்கலாம். பொதுவாக எந்த ஒரு பாடசாலையிலும் பாடத்திட்டம் முடிக்கப் படுவதில்லை. அப்படியிருக்க, தனியார் கல்வி நிலையங்களை மாணவர் நாடுவதில் தவறென்ன?

## பாலுறுப்பிரச்சினை

இதில் சித்தார்த்தன் கூறிய கருத்து நம்பும்படியாக இல்லை. பாடசாலைகளில் ஆண்பெண் கலந்துரையாடல்களை ஆசிரியர் கண்டிப்பது என்பது எமது பகுதிகளில் நான் காணாத ஒன்று.

## பொருத்தம்

ஒழுங்காக ஒரு பாடம் 40 நிமிடம் நடந்து, எல்லாப் பாடங்களிற்கும் ஆசிரியர் வந்து, அவர் அந்தத் துறை ஆசிரியராக இருந்து, வகுப்பிற்கு வரும் ஆசிரியர் படிப்பித்து, செய்முறை உபகரணங்களை மட்டும் காட்டாமல் செய்முறைகளை மாணவர்கட்குச் செய்து காட்டி வருகின்ற தான ஒரு பாடசலையே உயர்தரவகுபபு மாணவர்கட்கு அவசியமாகும். இப்படியான பாடசாலை இல்லாது போனதற்கு, நாட்டு நிலைமை மட்டும் காரணமல்ல. அதைச் சாட்டாக வைத்து பலரினதும் கவனயீனங்களும் ஆகும்.

## ஆய்வு

வேண்டுமேயானால் உயர்தர வகுப்பு மாணவர்களிடையே ஒரு ஆய்வு செய்து பார்க்கலாம. அப்போது உண்மை புலபபடும் பாடசாலை மாணவர்கட்கு மிக மிக அவசியம்; ஆனால் உயர்தர மாணவர்கட்கு மிக அவசியமா?

# மீண்டும் பெக்கர், கிராவ்

**வி. வாகீஸ்வரன்**

இம்மாதம் 10 ஆம் திகதி நியூயோர்க் நகரில் நடந்து முடிந்த, உலகின் பெரும் ரென்னிஸ் போட்டிகளில் ஒன்றான யூ எஸ். ஓபின் ரென்னிஸ் சம்பியன்களாக பொறிஸ் பெக்கர், ஸ்ரவி கிராவ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்கள் இருவருமே விம்பிள்டன் சம்பியன்களானமை வாசகர் அறிந்ததே. ஆனால் விம்பிள்டன் போட்டிகளை விட இங்கு மிகக்கடுமையாகப் போட்டியிட வேண்டியிருந்தது— இவ்விளம் மேற்கு ஜேர்மன் ஜோடிக்கு. இம்முறையும் வழக்கம போல, சுறுசுறுப்புமிக்க நியூயோர்க் நகர் பிளாஷிங் மெடோ (Flashing Meadow) அரங்கில், ஓகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி போட்டிகள் ஆரம்பமாயின இப்போட்டிகளுடன் தான் ஓய்வு பெறப்போவதாக இக்கிண்ணத்தைப் பல முறை வென்ற வீராங்கனை கிறிஸ் எவேட் மில்ஸ அறிவித்திருந்தமை, ரசிகர்கள் மனதில் ஒரு உற்சாகம் நிறைந்த எதிர் பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் அவர் கால் இறுதிப் போட்டியிலேயே சரணடைந்துவிட்டார். அவருடைய ஆண் ஜோடி என வர்ணிக்கப்படும் மிகப்பழைய பெரும் வீரர் 37 வயது நிரம்பிய ஜிமி கொனார்ஸ உம், தன்னைப்போல் அரைப்பங்கு வயதான –19 வயதும் நிரம்பாத இளம் அமெரிக்கக் காளை அன்ரே அகாஸியிடம் சரணாகதி அடைந்தார். ஆயினும, கிறிஸ் எவேட் ஐப் போட்டித் தொடரில் 18 வருடங்களாக விளையாடி 100 போட்டிகளை ஜெயித்தமை ஒரு சாதனையாகும்.

அரை இறுதிப்போட்டியொன்றில் அமெரிக்க ஆரன் கிறக்ஸ்டனைத் தோற்கடித்து இறுதிப்போட்டிக்குத் தெரிவானார் பெக்கர். ஸ்கோர் 6-4, 6-3, 6-4. அன்ரே அகாஸியை 7-6, 6-1, 3 6, 6-1 என்றமுறையில் வென்று தெரிவானார் இவான் லெண்டல். உலகின் முதற்தர வீரரும் அமெரிக்க வாசியும் செக்கோஸ்லாவாக்கியாவில் பிறந்தவருமான லெண்டலை 2 ஆம் தர வீரர் பெக்கர் 7-6, 1-6, 6-4, 7-6 என்ற கணக்கில் வென்று சம்பியன் ஆனார். இதன் மூலம் தனது பலத்தையும் மிகக்கடுமையான 'சேர்வ் அன்ட் வொலி' ஆட்டத்தின் திறமையையும் உலகுக்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறார். எதிரியை மூர்ச்சிக்க வைக்கும் சேர்வ் பண்ணி விட்டு, உடனே வலையை நோக்கிப் பாய்ந்து வந்து கலங்க வைக்கும் ஆட்டத்தைக் கொடுப்பது, பெக்கரிற்குக் கைவந்த கலை. ஆண்கள் இரட்டையர் பட்டத்தை அமெரிக்க ஜோன் மக்கன்ரோ, அவுஸ்ரேலிய மார்க் வுட்வேர்ட் ஜோடி சுவீகரித்தது. இதன் மூலம் மக்கன்ரோ. தான் ஒற்றையர் சுற்றுப் போட்டிகளில் வெகுவிரைவில் தோல்வியுற்ற கசப்பான அனுபவத்தை மறந்திருப்பார்,



பொறிஸ் பெக்கர்

பெண்கள் பக்க அரை இறுதிப்போட்டியில் ஆர்ஜன்ரீனாவைச் சேர்ந்த கபிரியாலா சாபாட்டினியை 3-6. 6-4, 6-2 என்ற கணக்கில் தோற்கடித்தார் கிராவ். அமெரிக்க நீக்ரோ சினா காரிஸனை 7-6 6-2 இல் ஜெயித்துத் தெரிவானார், மார்ட்டினா கடுமையான இறுதிப்போட்டியில் காலில் ஏற்பட்ட காயங்களினால் இன்னலுற்ற கிராவ்வை 6-3, 5-3 என்று முன்னணியிலிருந்த மார்ட்டினா தான் விட்ட இரு சிறு தவறுகளினால் கிராவ்விற்கு முன்னணி நிலையைக் கொடுத்து, தனது தோல்விக்குத் தானே காரணர் ஆயினார். இறுதி ஸ்கோர் 6-3, 5-7, 1-6. இதன் மூலம், இரு வருட 8 மாபெரும் 'கிராண்ட் ஸ்லாம்' போட்டிகளில்ஒன்றை மட்டும் மயிரிழையில் தவறவிட்டிருக்கிறார், உலகின் முதற்தர பெண் வீராங்கனையான 20 வயது ஸ்ரவி கிராவ்.

இந்த யூ. எஸ் போட்டியே இவ்வாண்டின் இறுதியானதுமான பெரும் ரென்னிஸ் போட்டி. மற்றையன வருட ஆரம்பத்தில் நடைபெறும் அவுஸ்ரேலிய ஓபின்; பின்மே மாதமளவில் நடைபெறும் பிரெஞ்சு ஓபின்; வருட நடுப்பகுதியில் நடைபெறும் விம்பிள்டன் போட்டிகளுமாகும். □

# உம்முடைய மனைவி வேலை செய்கிறாரா?

உமக்கு அநேக குழந்தைகள் உண்டா?

எனக்கு கடவுள் நல்லதைச் செய்யவில்லை. எனக்குப் பிறந்த பதினாறு பிள்ளைகளில் ஒன்பது தான் உயிரோடு இருக்கின்றன.

உம்முடைய மனைவி வேலை செய்கிறாரா?

இல்லை, அவள் வீட்டிலிருக்கிறாள்.

அப்படியா; அவள் எப்படி தனது நாளைக் கழிக்கிறாள்?

அவள் காலையில் எழுந்ததும் தண்ணீர் கொண்டுவந்து, விறகு சேகரித்து அடுப்பைப் பற்றவைத்து காலையுணவு தயாரிக்கிறாள். பின்னர் ஆற்றுக்குப்போய் உடைகளை அலசுகிறாள். அதன்பின்னர் அவள் சந்தைக்குப்போய் எமக்குத் தேவையான உணவுப் பொருட்களை வாங்குகிறாள். பின்னர் மதிய உணவைத் தயாரிக்கிறாள்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# ராஜீவ் அரசாங்கம் - சில குறிப்புகள்

1984ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் திருமதி இந்திரா காந்தி சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து நேரு வம்சத்தின் அடுத்த வாரிசாக ராஜீவ்காந்தி பிரதமரானார். இந்தியா "சுதந்திரம்" பெற்ற காலத்திலிருந்து (1947) இன்றுவரை ஏறக்குறைய நான்கு ஆண்டுகள்தான் நேரு வம்சத்தவர் அல்லாதோர் இந்தியாவின் பிரதம மந்திரிகளாய் இருந்துள்ளனர். (அது 1964—66 காலப் பகுதியும், 1977—79 காலப்பகுதியுமாகும்) இந்த வகையில் நேரு வம்சத்தில் பிறந்த ஒரே ஒரு காரணத்தால் ராஜீவ் பிரதமரானார்.

ராஜீவ் அடிப்படையில் அரசியல் நாட்டமற்றவர். அரசியலில் ஈடுபடுவதில்லை என்ற வாக்குறுதியின் பெயரிற்தான் சோனியாவை திருமணம் செய்து கொண்டார். சோனியாவின் விருப்பப்படி இந்த வாக்குறுதியை அவரிற்கு அளித்ததனூற்தான், இவரது இளைய சகோதரனாகிய சஞ்சே காந்தி அரசியலில் ஈடுபடுத்தப்பட்டார். சஞ்சேகாந்தி தீவிர அமெரிக்க சார்பாளனாய் செயற்பட்டுவந்த காலத்தில் விமான விபத்தில் பலியானார். இவரது மரணத்திற்கும் கே ஜி பி. (K.G B)க்கும் தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. அதேபோல இந்திராகாந்தியின் மரணத்திற்கும் சி. ஐ. ஏ.க்கும் தொடர்பிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இவை உண்மையாயின் இரு பெரும் வல்லரசுகளில் ஒன்று மகனையும், மற்றையது தாயையும் கொலை செய்துள்ளன.

ராஜீவ் காந்தியின் அரசியற் பிரவேசத்தை ஒரு விபத்து என்று அரசியல் அறிஞர்கள் வர்ணிப்பதுண்டு. அதாவது அரசியலிற்கு என்று பயிற்றப்பட்டவர் விமான விபத்தில் பலியானார். விமானம் ஓட்டப் பயிற்றப்பட்டவர் அரசியல் விபத்துக்கு ஆளாகி, அரசியலில் புகுந்தார். இவ்வாறு அரசியலில் பிரவேசித்த ராஜீவ் தாயின் மரணம் காரணமாக சில ஆண்டுகளுக்குள்ளேயே பிரதமரானார். இதனால் இவருக்குப் போதிய அரசியலனுபவம் இருக்கவில்லை.

இந்தியாவை ஒரு "ஜனநாயக" நாடு என வர்ணித்காலும், அங்கு குடும்ப அரசியலும் வம்ச ஆட்சியுமே உண்மையிற் கோலோச்சுகின்றது. இதனால் விவேகம் மிக்க தகுதியான தலைவர்கள் பதவிக்கு வருவது கடினம். ராஜீவ் தனது வபசச் சிட்டின் பிரகாரம் பதவிக்கு வந்ததும், சில புதிய பிரகடனங்களை வெளியிட்டார். இந்தியா புதிய பாதையில் அடியெடுத்து வைக்கப்போகிறது என்று கூறியவர், பின்வருமாறு விபரித்தார். புதிய கருத்து (New Idea), புதிய வல்லமை (New Talent), புதிய திட்டம் (New Programme) இவற்றைத் தனது அரசு உருவாக்கும் என்று கூறினர் இதன் பிரகாரம் இவர் பதவிக்கு வந்ததும் பல அனுபவம் வாய்ந்த தூர நோக்குமிக்க அரசியல் அறிஞர்களை ஒதுக்கிவிட்டு, (New Wave Advisers) எனப்படும் புதிய இளம் ஆலோசகர்களை

**சி. சண்முகவடிவேல்**

முன்னணிக்குக் கொண்டுவந்தார். ஒலிம்பிக் விளையாட்டில், இந்தப் பெரிய இந்தியாவால் ஒரு வெண்கலப் பதக்கத்தைத்தானும் பெற முடியாதளவிற்குத்தான், ராஜீவ் கூறிய 'புதியவல்லமை' வளர்க்கப்பட்டிருந்தது என்பதைக் காணமுடிந்தது. இதே போல அந்த நியூவேவ் ஆலோசகர்களால். உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் பெரிதும் குழப்பத்திற்கும் சீரழிவிற்கும் உள்ளாகியது. இலங்கைப் பிரச்சினையை ராஜீவ் முன்னெப்பொழுதும் இல்லாதளவிற்குச் சிக்கலாக்கினர்.

உள்நாட்டு அரசியலில் நிர்வாகத் திறமையின்மையும் ஊழலும் முதன்மைபெற்றன. திருவாளர் பரிசுத்தம் (Mr. Clean) என பதவிக்கு வரும்போது வர்ணிக்கப்பட்ட ராஜீவ் போபஸ் போன்ற பல ஊழல் குற்றச்சாட்டு மூலம், தனது தூய்மையை இழந்துள்ளார். இந்தியாவில் ஊழல் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது. ஆனால் நாட்டின் பாதுகாப்புவிடயத்தில் இடம்பெற்ற இத்தகைய ஊழல், திறமை அற்ற பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கே வழிவகுக்கும் என்ற ஐயத்தை, அரசியல் மட்டங்களில் ஏற்படுத்தியுள்ளது.

பாதுகாப்புத் துறைக்குள் ஊழல் விவகாரத்தை ஏடு தொடக்கி வைத்தவர் திருமதி இந்திரா காந்தியாவார். இதற்கான பிரதம ஆலோசகர் நரசிம்மராவ் ஆவார். 1970 களின் ஆரம்பத்தில், கட்சிக்கு நிதி திரட்டும் விடயம் பற்றி தீவிரமாக ஆலோசிக்கப்பட்டது. வெளிப்படையாகக் கணக்குக் காட்டத் தேவையில்லாத, பல பாதுகாப்புச் செலவீனங்கள் உண்டு எனவே பாதுகாப்புச் செலவீனங்களுக்குப் பணத்தைச் சூறையாடி, கட்சிச் செலவீனங்களுக்குப் பயன்படுத்தலாம் என்று நரசிம்மராவ் அபிப்பிராயம் தெரிவிக்கவே, அதன்படி இந்திரா காந்தி செயற்பட முற்பட்டார். இவ்வாறு அமைச்சர் மட்டத்தில் இவ் ஊழல் ஆரம்பமாகிய போதும், அது அதிகாரிகளின் துணையுடனேயே செயற்படுத்தப்பட வேண்டி இருந்தது. ஆதலினால் அதிகாரிகளும் தத்தமக்கென ஊழல் செய்ய வாய்ப்பு ஏற்பட்டது. இதனால் உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை, பாதுகாப்புத் துறைக்குள் ஊழல் குடிபுகுந்தது. இந்த ஊழல் ராஜீவ் காந்தியின் ஆட்சியின் போது விஸ்வரூபம் பெற்றது. இந்த ஊழலைத் தவிர்ப்பதற்குரிய எந்தவொரு நடவடிக்கையும் ராஜீவ் செய்யாததுடன் இதற்கு மேலும் உடந்தையாக இருந்துள்ளார் என்பதை, இன்று வெளியாகிக் கொண்டிருக்கும் பல்வேறு அறிக்கைகளும்காட்டுகின்றன.

இத்தகையதோர் ஊழல் மேலைத் தேசங்களில் நிகழ்ந்திருக்குமானல் ஆட்சியாளர் உடனடியாக இராஜினமாச் செய்திருப்பர் என்று இந்து பத்திரிகையின் ஆசிரியர் ராம் கூறியுள்ளமை சரியானதே. இந்தியாவின் எதிர்க்கட்சிகள் உண்மையில் பலமற்றவை. ஆனால் ராஜீவ் அரசாங்கத்தின் திறமையின்மை, ஊழல் என்பனவே இன்று அவர்களின் பலமாய் உள்ளது.




பொதுத் தேர்தலை நெருங்கும் இந்தியாவில் தற்போது காணப்படும் சூழல், பெரும் தேர்தல் வன்செயல்கள் நிகழக்கூடிய அறிகுறிகளை வெளிக்காட்டி நிற்பதாக, வெளிநாட்டு அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள். குறிப்பாக அரசியல்வாதிகளிடையே தரமற்ற வார்த்தைப் பிரயோகங்கள் நிகழ்வதாகவும், இவர்களது அணியாட்களவன் செயல்களில் ஆங்காங்கே ஈடுபடுவதாகவும், தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் இந்தியாவின் சில சட்ட சபைகளுக்குள் ஏற்பட்ட கைகலப்புகளும், லோக்சபாவுக்குள் ஏற்பட்ட இழுபறியும், இவற்றைவிட பெரும் கூச்சல் குழப்பங்களும் இந்திய ஜனநாயகப் பண்பை கேள்விக்கு இலக்காக்கி உள்ளன. நல்ல ஜனநாயகப் பண்புகளைப் பாதுகாக்கக்கூடிய, ஆளுமை மிக்க அரசாங்கம் இந்தியாவிற் தோன்றுமா என்பதே, ஜனநாயக விரும்பிகளின் பெரும் அவாவாகத் தெரிகிறது. □

## சிந்தனைமேடை — 2
### புலம் பெயரும் ஈழத்தமிழர்

இலங்கையின் வடக்கு — கிழக்குப் பகுதிகளிலிருந்து இன்று பெருவாரியான தமிழ் மக்கள் — குறிப்பாக இளைஞர்கள், யுவதிகள் — பிறநாடுகளுக்குச் செல்கின்றனர் இவர்கள் இப்படி பெருவாரியாக இடம்பெயர்வதற்குக் காரணமாகக் காட்டப்படுவது, இங்கு தீர்க்கப்படாதிருக்கும் இனப்பிரச்சினையும், அதனையொட்டித் தொடர்ந்து நிகழும் வன்செயல்களுமே.

இப்படி இவர்கள் புலம் பெயர்ந்து செல்வதால் நமக்கும் நமது நாட்டுக்கும் ஏற்படும் சாதக பாதகமான விளைவுகள் யாவை?

- இது நமது பொருளாதாரத்தை எவ்வாறு பாதிக்கிறது. அல்லது எவ்வாறு போசிக்கிறது?
- அரசியல் ரீதியாக இது ஏற்படுத்தும் தாக்கம்.
- இதை மூளைசாலிகளின் வெளியேற்றம் எனக் கொள்ளலாமா அல்லது நமது இளம் சந்ததியினரின் மூளை விசாலிப்படைகிறது எனச் சொல்லலாமா?
- கலாசாரச் சீரழிவா அல்லது புதிய பூரண கலாசாரத்தின் திறவுகோலா?
- அறிவியல் ரீதியான பயன்பாடு?
- ஆரோக்கியம் பேணப்படுமா? அல்லது புதுப்புது அந்நிய நோய்கள் பரப்பப்படுமா?

இவைபோன்றவற்றை மையமாகக்கொண்டு சிந்தனைமேடை — 2 இன் விவாத அரங்கில் பங்குபற்றுமாறு வாசகர்கள் வேண்டப்படுகின்றனர்.

விடயங்கள் தனித்தாளில் 3 பக்கங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்பட வேண்டும்.

— ஆசிரியர் □

## கொத்தலாவலை...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொத்தலாவலை பதவிக்கு வந்ததும் தனக்கு எதிராகச் செயற்பட்ட சில முக்கிய நபர்களை முடிந்தவரை, பழி வாங்க முற்பட்டார். அவ்வாறு பழிவாங்கப்பட்டவர்களுள் சோல்பரிப் பிரபுவும் ஒருவர். சோல்பரிக்குப் பதிலாக ஒலிவர் குணதிலகாவை மகாதேசாதிபதியாக நியமனம் செய்தார். இதேபோல கட்சிக்குள்ளும் பல உட்பூசல்கள் எழுந்தன.

இத்தகைய சில உட்பூசல்கள் சம்பந்தமாக ஏ.ஜே.வில்சனல் எழுதப்பட்ட ஒரு பகுதி ஜி. பி. வேதநாயகம் என்பவரால் தகவலாகத் தரப்படுவதைக் கீழே காணலாம் :

"சேர் ஜோண் கொத்தலாவலையின் மந்திரி சபையினுள் நேர்மையான கூட்டுறவு மனப்பான்மை இருக்கவில்லை. அவரது தலைமையை விரும்பாத சிலரும் மந்திரிசபையில் இருந்தனர். தமது சகாக்களின் நம்பிக்கையைப் பெறமுடியாத காரணத்தால் அநேக விடயங்களில் அவர் தனியாகச் செயலாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது மந்திரிமார் தங்களின் எதிர்ப்புக்களையும்,கருத்து வேற்றுமைகளையும் பகிரங்கமாக வெளியிடாது இருந்தனரெனினும், மந்திரிசபை கூட்டுப் பொறுப்புடன் கடமையாற்றவில்லை — என்பது தெளிவாயிற்று. பிரதம மந்திரி விவகாரங்களைச் சிக்கலாக்கிக் கொண்டிருப்பது தெளிவாகத் தெரிந்த தெனினும், அவரது சகாக்களில் எவரேனும் அவரை அச்சிக்கலினின்று காப்பாற்ற முன்வந்ததாகத் தெரியவில்லை. விவகாரங்களைக் கடுமையான முறையில் சிக்கலாக்கிக் கொண்டு, அதிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்காகப் பிரதம மந்திரி ராஜினமாச் செய்வதைக் காணத் துடித்துக் கொண்டிருந்த ஒரு கோஷ்டியும் இருந்தது. காரணம், பிரதம மந்திரிப்பதவியை எதிர் பார்த்த சிலருக்கு அது சுலபமான வழியாகிவிடும் என்பது தான். இங்கும் மந்திரி சபை கூட்டாகச் செயலாற்ற முயற்சி செய்யாதிருந்ததற்கும், நாட்டின் சமூக — பொருளாதார நிலைமைகளை உயர்த்தத் திட்டம் தீட்டாதிருந்ததற்கும் காரணம், எதிர் கட்சியின் பலவீனம் தான்.

நாட்டுக்குத் தகுதியான அரசாங்க மொழியொன்றைத் தெரிவு செய்து கொள்ளும் பிரச்சினை எழுந்ததால், பொதுத் தேர்தலை நடத்தப் பிரதம மந்திரி முடிவு செய்தார். அதற்கிணங்க மகா தேசாதிபதிக்கு ஆலோசனை கூறிப் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டார். அரசியற் கருத்துகளின்படி இது ஒரு குழப்ப நிலையை ஏற்படுத்தியது. அரசாங்க அதிகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து கைப்பற்றிக் கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதை எதிர்கட்சிகள் உணர்ந்தன. அரசியற் சக்திகள் மீண்டும் ஒன்று கூடின."

(குடியியலும் அரசியலும் நூலிலிருந்து) □

## உம்முடைய...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீர் மதிய உணவுக்கு வீட்டிற்கு வருகிறீரா?

இல்லை, இல்லை, அவள் மூன்று கிலோமீற்றர் நடந்து எனக்கு உணவுகொண்டு வயலுக்கு வருகிறாள்.

அதன்பின்னர்?

அவள் கோழிகளையும் பன்றிகளையும் கவனிக்கிறாள். முழு நாளும் பிள்ளைகளையும் கவனித்து வருகிறாள் அதன்பின்னர் மாலைச் சாப்பாட்டை சமைக்கிறாள்; நான் வீட்டுக்கு வரும்போது அது தயாராய் இருக்கும்.

அவள் இரவுச் சாப்பாட்டுக்குப் பின்னர் உறங்கப் போகிறாளா?

இல்லை. நான்தான் உறங்கப்போகிறேன். அவள் ஒன்பது மணிவரை வேலைசெய்வதற்கு வேலைகள் உண்டு.

ஆனால் நீர் உம்முடைய மனைவி வேலை செய்வதில்லை என்றல்லவா சொல்கிறீர்?

இல்லை. நான் அவள் வீட்டில் இருக்கிறாள் என்றுதான் சொன்னேன்.

நன்றி : சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அறிக்கை □

## பிரஜா உரிமை...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணப்பங்களை, குடியுரிமைப் பதிவு ஆணையாளர் பல தடவைகளில் பிழையான முறையில் பொருள் கொண்டு நிராகரித்துள்ளார் என, உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. ஆனால், அரசு உயர்நீதிமன்ற நீதிக்கட்டளைகள் 1949 லிருந்தே செயற்படாவண்ணம் 1952 ஆம் ஆண்டின் 45ஆம் இலக்கச் சட்டத்தை நிறைவேற்றியது. உயர்நீதிமன்றத்தின் கட்டளையை அரசு பலமுறை உதாசீனம் செய்தது. இதனால் பத்து இலட்சத்திற்கு மேலானோர் நாடற்ற அநாதைகளாக்கப் பட்டனர்.

தொடர்ந்தும் இந்நாடற்றோர் பிரச்சினை பூதாகாரமான பிரச்சினையாக வளர்ந்து வந்ததனால், அதற்குத் தீர்வுகாண வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 1964இல் ஸ்ரீமா — சாஸ்திரி ஒப்பந்தம், 1974இல் ஸ்ரீமா — இந்திரா ஒப்பந்தம் என்றவாறு சம்பந்தப்பட்ட மக்களையோ, மக்களின் பிரதிநிதிகளையோ கலந்தாலோசிக்காது; மனிதாபிமானமற்ற முறையில், மக்களை பண்டங்களைப் பங்கிடுவதுபோல் ஒப்பந்த அடிப்படையில் இலங்கையும் இந்தியாவும் பங்கிட்டுக் கொண்டன. இவ்வொப்பந்தங்கள் அமுல் செய்யப்படும் விதம் மனிதாபிமானத்தைப் பொறுத்து அநேக பிரச்சினைகளுக்கு அடிகோலுகின்றது என்பதை மறுப்பது கடினமாகும். மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இம்மக்கள்மீது இனவாதக்கண்ணோட்டத்தையே செலுத்தி வந்துள்ளன.

தொடர்ந்தும் நாடற்றோர் பிரச்சினை பலரின் மனிதாபிமானத்தை உலுக்கி வந்தது. 1986 ஆம் ஆண்டில் வட - கிழக்கு தமிழீழப் போராட்டம் உச்ச கட்டத்தை அடைந்ததுடன், அப்போராட்ட இயக்கங்களினூடாக நாடற்றவர் பிரச்சினை சர்வதேச ரீதியாக வெளிக்கொணரப்பட்டது. இதனால் இலங்கை அரசாங்கம் கட்டாயத்தின் பேரில் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டியிருந்தது. இதனடிப்படையிலேயே 1986 ஆம் ஆண்டு 18 மாதங்களுக்குள் நாடற்றவர் பிரச்சினை தீர்க்கப்படும் என ஐ.தே.க. அரசாங்கம் அறிவித்தது. ஆனால், 18 மாதங்கள் கழிந்தும் இப்பிரச்சினை தீர்க்கப்படாமையால், அச்சட்டம் தன்னியல்பாக வலுவிழந்தது. நாடற்றவர் மீண்டும் அதே நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

தொடர்ந்தும் 94,000 பேர் நாடற்ற அநாதைகளாகவே இருந்து வந்தனர். இப்பிரச்சினையைத் தீர்ப்பதாகக்கூறி, 1988 ஆம் ஆண்டு 39ஆம் இலக்க, 2 ஆம் பிரிவு -நாடற்ற ஆட்சிகளுக்குப் பிரஜாவுரிமை வழங்கல் (விசேட ஏற்பாடு) சட்டம் கொண்டுவரப்பட்டது. நாடற்றோர் பிரச்சினை குறித்து தொழிற்சங்கப் போராட்டங்கள் வலுவடைந்து வந்ததும், தென்னிலங்கை இடதுசாரியமைப்புக்களின் கோரிக்கைகளுடன், வட-கிழக்கு போராட்ட இயக்கங்களின் போராட்டங்கள் வலுவடைந்து வந்தநிலையிலும், ஐ.தே.க.அரசாங்கம் இச்சட்டமூலத்தைக் கொண்டு வந்தது. இதைவிட 1988 இல் பொதுத் தேர்தலையும், ஜனாதிபதி தேர்தலையும் எதிர்நோக்கியிருந்தமையால், தேர்தல் களத்தில் பலிக்கடாக்களாக மலையக மக்களைப் பயன்படுத்தவே ஐ.தே.கட்சி முனைந்திருந்தது என்பதே உண்மையாகும். தவிர, மலையக மக்கள் மீது இருந்த மனிதாபிமானமோ, இவர்களின் மனித உரிமைகளை மதிக்கின்றார்கள் என்பதோ இதன் அர்த்தமல்ல.

என்றாலும் இச்சட்ட மூலத்தின் பலவீனம் அமுலாக்கல் விடயத்திலும், ஏமாற்றுவித்தைக் குளறுபடிகளிலும் வெளிப்படுகின்றது. முக்கியமாக, இச்சட்ட மூலத்தைப் பெரும்பான்மை வாக்குப்பலத்துடன் இரத்துச் செய்து அல்லது வாபஸ்பெற்று, மீண்டும் மலையக மக்களை நாடற்றவர் ஆக்கலாம். இவ்வாறான ஒரு மனிதாபிமானமற்ற — வஞ்சிக்கப்பட்ட — மனித உரிமைகளை மீறும் — நடவடிக்கைகளுக்கே மலையக மக்கள் ஆளாக்கப்பட்டு வருகின்றனர்.

ஆகவே மலையக மக்களின் அடிப்படை மனித உரிமைப் பிரச்சினையான பிரஜா உரிமைப் பிரச்சினைக்கு — வாக்குரிமை பிரச்சினைக்கு — இன்னும் பூரணமாக முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை என்பதே உண்மை.

இந்த இலட்சக்கணக்கான மக்களின் அடிப்படை மனித உரிமை மீறலுக்கு, ஒரு பொதுப் பிரகடனம் மூலம் நாடற்றவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கல் அல்லது 1948 ஆம் ஆண்டு பிரஜா உரிமைச் சட்டத்தை இரத்துச் செய்வதன் மூலமேயே சாத்தியமான தீர்வு காணப்பட வேண்டும். இதுவே நிரந்தரமானதும் சிறந்த தீர்வாகவும் இருக்க முடியும். மாறாக புதிய பிரஜா உரிமைச் சட்டங்களையோ திருத்தங்களையோ கொண்டுவருவது, மீண்டும் இவர்களை நாடற்ற அநாதைகளாக ஆக்குவதற்கான அறிகுறியாகும். ஏனெனில் பிரஜா உரிமையை யாரும் வழங்குவதற்கு அது ஒரு சலுகையல்ல; மாறாக அது பிறப்பிலேயுள்ள அடிப்படை உரிமையாகும். □

## பாரம்பரிய...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேரம் மிக்க சிரமத்துடன் நடித்தார். குறிப்பாக சின்னானைத் தேடிப் புறப்படும் கட்டத்தில் மிக வேகமாகவும், பரபரப்படைவதாகவும் இருந்தது. இதைவிட சின்னானுடன் வேட்டையாடும் கட்டத்தில் அம்பு,வில் பாவிக்கும் நளினத்தை விடுத்து நவீன துப்பாக்கிகளை பாவிப்பது போன்ற நளினத்தையே பிரதிபலித்தனர். ஆரியப்பூமாலையைக் கண்டு காத்தான் வரமாட்டேன் என்றதும், சின்னான் விடமாட்டேன் என்றதும் நன்றாக இருந்தது. இருவரும் கப்பலில் போகும் காட்சி காத்தவராயன் கூத்து மரபிற்கு ஒவ்வாத வகையில் அமைந்திருந்தது. அதைவிட காத்தவராயன் கழுமரம் ஏறும் கட்டத்தில் அதன் வேதனையும், துயரமும் நன்கு வெளிப்படுத்தப்பட்டது. அந்தக் கட்டத்தில்தான் காத்தவராயனாக நடித்தவர் பாத்திரத்துடன் ஒத்துப்போனமையை சிறப்பாகக் காணமுடிந்தது. அதற்குப் பாராட்டத்தான் வேண்டும். ஆனால் அதே நேரத்தில் காத்தவராயன் பாத்திரம் பாடிய ''வென்று வந்தேன் அம்மா வென்று வந்தேன் அந்த வேல் விழியை நானும் வென்று வந்தேன்'' என்ற பாடல் அசல் சினிமா மெட்டினை தழுவியிருந்தமை ஜீரணிக்க முடியாதிருந்தது.

பிற்பாட்டுப் பாடுவதன் முக்கிய நோக்கம் நடிகனின் அல்லது நடிகையின் குரலையும், கருத்தையும் பார்வையாளருக்கு தெளிவுபடுத்தவேயாகும். ஆனால் இங்கோ பிற்பாட்டுப் பாடுவதற்கு ஒழுங்கமைக்கப்பட்ட முறை சிறப்பாக இருந்தபோதிலும்; தனி நடிகர்கள் விட்ட சிறிய பிழைகளைக்கூட நிவர்த்தி செய்யும் வகையில் அமையவில்லை.

முதல்தடவையாக இக்கூத்தினைப் பார்த்தவர்கள் திருப்தியையும், முன்பு பார்த்துப் பழக்கப்பட்டவர்கள் அதிருப்தியையும் தாங்கி நின்றமையை நாடகத்தின் முடிவில் அவதானிக்க முடிந்தது. இரண்டுமணி நேரமாக நாடகம் சுருக்கப்பட்டிருந்தபோதிலும்; இரவு முழுவதும் கூத்துப் பார்த்த அளவிற்கு களைப்பாக இருந்தது. இந்நடவடிக்கையானது பார்வையாளரை நன்கு ஈர்க்கவில்லையென்பதையே காட்டுகிறது.

பாரம்பரிய கலைவடிவங்கள் பல்வேறு வளர்ச்சியடைந்த நாடுகளிலும் கூட அதன் கட்டமைப்பு மாறாமல் இன்றும் பேணப்படுகிறது. உதாரணமாக சீனா, யப்பான், ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகளில் சிறப்பாக அடையாளம் காண முடிகிறது. அதேவேளை வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் நீண்ட பாரம்பரியத்துடன் பேணப்பட்டு வருகின்ற கூத்து மரபுகளை மேலும் பேணுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாறாக; அதன் பாரம்பரியத்தைக் குறைத்து மதிப்பிடுமளவுக்கு தற்கால நடவடிக்கைகள், அதுவும் பல்கலைக்கழக மட்டத்தில் அமைந்துவிடக்கூடாது. உரியவர்கள் (மாணவர்கள் அல்ல) அதன் பாரம்பரிய தன்மையை உணர்ந்து இனிமேலாவது பாரம்பரிய கலை வடிவத்தை ''கருச்சிதைவு'' செய்யாமல் பாதுகாப்பார்களா? □

## முதுகச்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

விரும்புவாரா? இல்லா விட்டால், கொழுத்த சீதனத்தோடு ஒரு புரோக்கர் கல்யாணக் கதையை எழுதிக் கெட்டி மேளம் அடிக்கவேண்டியதுதான்! இதை நடுவர்கள் விரும்பா விட்டால்?...... விரும்பா விட்டால் அதற்கு நேர் எதிராக ஓடிப்போகும் ஒரு கதையையும் அனுப்பி வைக்க வேண்டியதுதான்! அதுதான் எத்தனை கதைகளையும் அனுப்பலாமாமே!......

புரட்சி நடுவர்களானால், சிகப்பு ஆஹாஸத்தில் அதி சிகப்பு ஸூர்யன் புஷ்பித்து அதி அதி அதி சிகப்பு மனுஷ்யர்கள் அஹிலத்தில் பிரவேஸம் கொண்டார்கள் என்று காது குத்தலாம்.

ஐபீகேயெஃப் ப்ளொட் தான் இப்போதைய மார்க்கட் என்று நினைக்கிறேன்.

உறுப்புகளை அறுத்து அங்கேயே ஈடுவைத்து விட்டு வந்த இந்த அப்பிராணியமான அமைதிப் படைக்கு, மேகம் மேகமாய் நோய் பரவியிருப்பதாக இந்தியாவில் புதிய வாகடம் எழுதப்படுகிறதாக ஒரு புதிய ஐதீகக் கதை! இந்தப் படைக்குழந்தைகளை நினைத்தால் பாவமாகக் கிடக்கிறது. தூக்கி வைத்துக் கொண்டு அமாவாசை நிலவைக்காட்டிப் பழங்காலப் பாற்கடலின் அசுரபானத்தைக் கொடுக்க ஆசை!

(அடுத்த இதழில் முடியும்) □



### 12 - 9 - 89 செவ்வாய்

ஜே. ஆரின் மைத்துனி திருமதி கிளாடிஸ் ஜயவர்த்தனா கொழும்பில் காரில் சென்று கொண்டிருந்தபோது, இனந் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார் □ சங்கானையில் காலை 10.30 மணியளவில், வீதியில் வைத்து 7 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர்கள் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதாக ஈ.பி.ஆர். எல். எவ். அறிக்கையொன்று தெரிவித்தது □ அனைத்துக் கட்சி மாநாட்டில் தமது இயக்கம் கலந்து கொள்ளுமென கே. பத்மநாபா திருகோணமலையில் தெரிவித்தார் □ அனைத்துக்கட்சி மாநாடு பற்றி அறிக்கை யொன்றை சிறிமாவோ பண்டாரநாயக்கா வெளியிட்டார் □ பாதுகாப்புப்படையினரின் 25 வீடுகள் தென்னிலங்கையில் தீக்கிரையாக்கப்பட்டன □

### 13 - 9 - 89 புதன்

கல்விபயிலும் மாணவர்கள் கட்டாயத்தின் பேரில் இராணுவப் பயிற்சிக்குக் கொண்டு செல்லப்படமாட்டார்கள்; ஏற்கனவே பயிற்சிக்குக் கொண்டு செல்லப்பட்ட மாணவர்கள் கல்வியைத் தொடர விரும்பினால் விடுவிக்கப்படுவர் என, யாழ். மாவட்ட அரசியல் இணைப்பாளர் ஆ. முருகநேசன் யாழ். செயலகக் கலந்துரையாடலில் தெரிவித்தார் □ கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அனைத்துக்கட்சி மாநாடு ஆரம்பமானது. அழைக்கப்பட்ட 27 கட்சிகளில், 21கட்சிகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். அரசியல் லாபத்தை ஈட்ட முற்படாமல் பிரச்சினையைத் தீர்க்க விசுவாசமாகச் செயற்பட வேண்டுமென, மாநாட்டில் பேசிய ஜனாதிபதி தெரிவித்தார் □ கொழும்பில் குண்டொன்று வெடித்தது. பெரும் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை □ உருத்திரபுரம் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது □ மூதூர் கட்டைபறிச்சானில் 15 பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர் □

### 14 - 9 - 89 வியாழன்

அமைதிப்படை விலகல் தொடர்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் தனியான உடன்படிக்கை இன்னும் சில தினங்களில் கைச்சாத்தாகுமென, அமைச்சர் ரஞ்சன் விஜெரத்ன தெரிவித்தார் □ வட-கிழக்கில் யுத்த நிறுத்தமொன்றை அறிவிக்கும் போது, நிபந்தனைகளை விதிப்பது தவிர்க்க முடியாதது என்று இந்தியா அறிவித்தது □ ரூபவாஹினி அறிவிப்பாளர் திருமதி சக்காரியா கோமஸின் சடலம் அங்குலான கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டது □ இந்தியப் படை வெளியேறியபின் தாக்குதல் நடந்தால் முறியடிக்கவே தமிழ் தேசிய இராணுவ அமைப்பு உருவாக்கப்படுவதாக, ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் மத்திய குழு உறுப்பினர் எல். கேதீஸ்வரன், கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார் □ தென்னிலங்கைச் சம்பவங்களில் 20 பேர் கொல்லப்பட்டனர்.

### 15 - 9 - 89 வெள்ளி

இந்தியப்படை, வெளியேறியபின் பாதுகாப்புக்குப் பொறுப்பு யார் என்பதை முடிவு செய்வதில் உள்ள இழுபறியே, இலங்கை — இந்தியக் கூட்டறிக்கை தாமதமாகக் காரணம் என செய்தி வெளியானது □ நீர்வேலியில் இரண்டு குழுக்களுக்கிடையில் நிகழ்ந்த மோதலில் சிலர் கொல்லப்பட்டனர் □ சீனன் குடாவில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் 6 ஜவான்கள் கொல்லப்பட்டனர்; 11 ஜவான்கள் காயமடைந்தனர் □ கட்டைபறிச்சான் அசம்பாவிதங்கள் தொடர்பாக ஈ. ஜ. மு. அறிக்கையொன்று விடுத்தது. தமது முன்னணித் தோழர் காளிராசா இனங்காணப்பட்டுப் படையினரால் கொல்லப்பட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது □ அனைத்துக் கட்சி மாநாடு தொடர்பாக சிறிமாவோ தலைமையில் கூடி எதிர்க்கட்சிகள் ஆராய்ந்தன □

### 16 - 9 - 89 சனி

கடந்த மே மாதம் முதல் இதுவரை 65 இந்திய ஜவான்களைத் தாம் கொன்றுள்ளதாக, ஜே. வி. பி. அறிவித்தது □ யுத்த அறிவிப்பை ஏற்றுச் செயற்படுவதாக எல்லாத் தமிழ்க் குழுக்களும் பகிரங்க அறிக்கைகளை வெளியிட்டால்தான், தாம் யுத்த நிறுத்தத்தை அறிவிக்க முடியுமென இந்தியா கூறுவதாக செய்தி வெளியானது □ அரசுக்கு எதிராகச் சட்டமறுப்பு இயக்கத்தை நடத்துமாறு ஜே.வி.பி. அழைப்பு விடுத்தது □

### 17 - 9 - 89 ஞாயிறு

மாத்தறைப் பகுதியில் 29 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன □ மரநடுகை வாரத்தை ஆரம்பித்து வைக்கையில், மனிதனும் மரமும் இணைபிரியா நண்பர்கள் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார் □ அமைதிக்கான அழைப்பை ஜே.வி.பி. ஏற்றால் அதன்மீதான இராணுவத் தாக்குதல் நிறுத்தப்படுமென, அரசு தெரிவித்தது □

### 18 - 9 - 89 திங்கள்

வவுனியாக் கச்சேரிக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த 'ரைம் பொம்' படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது □ பருத்தித்துறையில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ஷெல் வீச்சில் ஓர் இளைஞர் பலியானார்; பெண்ணொருவர் படுகாயமுற்றார் □ வதிரிப்பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது □ வடபகுதியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது □

திசை
THISAI

# இந்தியப் படைவிலகல் ஒப்பந்தம்: சோவியத் திருப்தி

இந்தியப் படைவிலகல் சம்பந்தமாக இந்திய – இலங்கை அரசுகளுக்கு இடையே திங்கள் அன்று நிகழ்ந்த ஒப்பந்தம்பற்றி, சோவியத் யூனியன் திருப்தி தெரிவித்துள்ளது. சென்ற வாரத் 'திசை'யில் சோவியத் இதுபற்றி இந்தியாவை மறைமுகமாக வற்புறுத்துவது பற்றி, செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வருடம் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கையிலிருந்து இந்தியப் படைகள் விலகுவதற்காகக் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் தமக்குப் பெரும் மனத்திருப்தி அளிப்பதாக, சோவியத் யூனியனின் வெளிவிவகார அமைச்சக அதிகாரி, செவ்வாய்க் கிழமை மொஸ்கோவில் கூறினர்.

படைவிலகல் விடயம் சம்பந்தமாக அமெரிக்கா ஒப்பீட்டு ரீதியில் அமைதியாக இருக்கின்றது. ஆனால் படைவிலக வேண்டும் என்பதில் சோவியத் யூனியன் அதிக சிரத்தை காட்டிவருகின்றது.

சோவியத் யூனியன் தனது சொந்த நலன் காரணமாகவே இத்தகைய சிரத்தை காட்டுகிறதே தவிர, இலங்கைமீதோ அன்றித் தமிழ் மக்கள் மீதோ உள்ள நல்லுணர்வாலல்ல, என்பதும் குறிப்பிடத்தக்கது. அழுவார் அழுவார் எல்லாம் தம்கவலை, திருவன் பெண்டிலுக்கு அழுவார் எவருமில்லை என்பதுதான் கதையோ!

## தவருன இடத்தில் வைத்து தானம்

வீதி ஒரம் அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்த பள்ளிச் சிறுவர்கள் மீது பஸ் மோதி 16 சிறுவர் மாண்டனர். இத் துயரச் சம்பவம் செவ்வாய்க்கிழமை தமிழகத்தில் நிகழ்ந்தது.

இவ்விபத்தில் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயம் என்னவெனில், பள்ளிச் சிறுவர்களை வீதி ஓரத்தில் அமர்த்தி உணவு அருந்த வைத்ததே. இத்தகைய பொறுப்பற்ற செயலால், அன்னதானத்துக்காக வீதியோரத்தில் அமர்த்தப்பட்ட சிறார்களின் உயிர் மரணதேவனுக்குத் தானமாக்கப்பட்டது!

## இசைமுகம்

''சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே''

### போரும் அமைதியும்

எழுபதுகளில் ஆரம்பித்து எண்பதுகளில் உக்கிரம் பெற்ற ஈழத் தமிழ்பேசுமினத்தின் விடுதலைப் போராட்டம், இக் குறுகிய கால எல்லைக்குள் எத்தனை நெளிவு சுழிவுகளை, எத்தனை குணரூபங்களை, எத்தனை கோரத்தாண்டவங்களைக் கண்டுவிட்டது! இன்னும் காணப்போவதற்கான சாத்தியக்கூறுகளே அதிகம்.

கடந்த செவ்வாய் வரை நீர்வேலிப் பகுதியில் கேட்ட சத்தங்கள் இதைத் தொடரவைக்கும் அறிவிப்புகளே. விடுதலை என்பதுஎல்லையற்றது என்பதால் எமது விடுதலைப் போராட்டமும் எல்லையற்று நீண்டுவிடுமோ என்று ஒருவர் பரிகாசமாகவும் கேட்கலாம்.

இத்தனைக்கும் காரணம் என்ன?

விடுதலை பற்றிய எம்மினத்தின் தெளிவின்மையே. இந்தத் தெளிவின்மையின் பிரதிபலிப்பே இன்றுவரை தமிழ்ப் பகுதிகளில் நீள்கின்ற அமைதியின்மைக்குக் காரணம் என்பது மறுப்பதற்கில்லை.

ஆத்மீகம் பற்றிய தெளிவின்மை, எப்படி உலகில் இன்றுவரை பலவித சமயச் சண்டைகளுக்குக் காரணமாக உள்ளதோ அவ்வாறே எமது விடுதலை பற்றிய தெளிவின்மை எம்மிடையே பலவித குழுச்சண்டைகளுக்கும் போட்டிகளுக்கும் காரணமாய் உள்ளது. அதிகம் போகத்தேவையில்லை. இந்துக்கள் மத்தியிலேயே சிவ வழிபாட்டுக்காரர் ஒருபுறமும் விஷ்ணு வழிபாட்டுக்காரர் மறுபுறமும் சக்தி வழிபாட்டுக்காரர் இன்னொருபுறமும் பொருதிக்கொள்வது போலவே, நமது விடுதலை வழிபாடும் பலவித குழுத்தோற்றப்பாடுகளுக்கும், சண்டைகளுக்கும் காரணமாய் அமைந்துவிட்டது துர்ப்பாக்கியமே.

நாம் வழிபடும் விஷ்ணுவும் சிவனும் சக்தியும் அடிப்படையில் ஒரு பொருளே என்ற அநுபவம் நமக்கிருக்குமானால் இந்த வீண் சமயச் சண்டைகள் எழுந்திருக்க நியாயம் இல்லை.

விடுதலை பற்றிய நமது தெளிவும் அதைச் சாத்தியப்படுத்தும் தற்போதைய நடைமுறை வழியுமே உண்மையான நிரந்தர அமைதியைக் கொண்டுவர வல்லது.

இதுபற்றி நாம் தெளிந்து இயங்க முற்பட்டால் இடையில் மத்தியஸ்தம் செய்துவைக்க எந்தக் குருக்கள்மாரும் தேவைப்படாது.

இத்தகைய நோக்கில் இதுசம்பந்தப்பட்ட சகலரும் இயங்குவார்களா? □

## ஈழத்து நூல்களின் கொள்வனவிற்கு பல்கலைக்கழக ஆசிரியரின் ஆலோசனைகள்

ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களைக் கொள்வனவு செய்வது, ஈழத்து நூற்கண்காட்சியொன்றை ஒழுங்கு செய்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்றை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சு. டிவகலாலா ஒழுங்கு செய்திருந்தார்.

அதில், பல்கலைக்கழக ஆசிரியர் பதினுன்குபேர் கையெழுத்திட்ட அறிக்கையொன்றை கலாநிதி எம். ஏ. நுஃமான் சமர்ப்பித்தார். அதிலுள்ள சில ஆலோசனைகளாவன:

1- ஒவ்வொரு நூலிலும் கூடியபட்சம் 500 பிரதிகளாவது வாங்க முடியும். குறைந்தபட்சம் ஒவ்வொரு நூலிலும் 300 பிரதிகளாவது கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

2. ஒவ்வோர் ஆண்டும் அவ்வாண்டில் வெளிவந்த நூல்களே கொள்வனவு செய்யப்படுதல் விரும்பத்தக்கது.

3. நூல்களின் தரம் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். தர நிர்ணயத்திற்காகத் தகுதிவாய்ந்த ஒரு குழுவினை உள்ளூராட்சி ஆணையாளர் அமைத்துக்கொள்வது விரும்பத்தக்கது.

4. புதிய துறைகள் சார்ந்த நூல்களைக் கொள்முதல் செய்வதற்கு முன்னுரிமை கொடுக்கப்படலாம்.

5. வருடம் ஒரு முறையேனும் ஒரு புத்தக வாரத்தைப் பிரகடனம் செய்து, பிரதேச ரீதியாக புத்தகக் கண்காட்சிகளையும், புத்தகச் சந்தைகளையும் ஒழுங்கு செய்தல் வேண்டும். இது நம்மத்தியில் புத்தகக் கலாசார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

## தாக்கினல்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையான அமைதியைக் காண இந்திய அரசு, மாகாண அரசு, விடுதலைப்புலிகள் ஆகிய அனைவரும் முயலவேண்டும்.

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) கூறுவது போல, அனைவரும் பங்குபற்றக் கூடிய புதியதோர் தேர்தல் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு நடத்தப்பட வேண்டும் என்றும், அதில் மக்கள் தமது தீர்வைக் கூற விடப்பட வேண்டும் என்கிற கருத்தும் தற்போது வலுவடைந்திருப்பது நல்ல அடிப்படையாகும். தமிழ் மக்களின் நல்லெண்ணத்தையும் மதிப்பையும் பெற, நல்ல நடவடிக்கைகள் மூலம் இந்தியா முயலும் என்றும் மேலும் எதிர்பார்க்கப்படுகிறது.

தாக்கினல் திருப்பித் தாக்குவோம் என்ற வார்த்தைகள் மாறி, சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தாக்கமாட்டோம் என்ற முடிவை எடுப்பார்களா?

### 'திசை' விநியோகம்

போக்குவரத்துச் சீர்குலைவுகளினல் வெளியிடங்களுக்கு திசை உரியநேரத்தில் கிடைப்பதில்லை என அறிகிரேம். திசை வாசகர் பலர் இதுபற்றி கடிதம் மூலம் அறியத் தந்துள்ளமைக்கு நன்றி. நிலைமை சீர் அடைந்ததும் வெளியிடங்களுக்கு திசை உரிய நேரத்தில் கிடைப்பதற்கு ஒழுங்கு செய்யப்படும்.

— நிர்வாகம்

## உயிரிழப்பு நிவாரணம் பெற்ருேர் மீண்டும் போலியாக விண்ணப்பம்

1983 ஆம் ஆண்டு ஜூலை முதல் இற்றைவரை அசம்பாவிதங்களினுல் ஊனம், அல்லாவிட்டால் உயிரிழப்பு ஏற்பட்டதனுலான செலவினங்களை ஈடுசெய்யும் முகமாகப் பண உதவி வழங்கும் பொருட்டு, யாழ்.செயலகஉத்தியோகத்தர்கள் விண்ணப்பங்களை சமீபத்தில் பரிசீலனை செய்துள்ளார்கள். அச்சமயம், இறந்தவர்களுக்கான உதவிப்பணத்தைக் கொழும்பில் பெற்ற இறந்தவரின் சட்டபூர்வமான உறவினர் ஒருசிலர், மறுபடியும் யாழ்ப்பாணத்திலும் பணவுதவிக்கு விண்ணப்பித்துள்ளமை அம்பலமாகியுள்ளது. கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட கொம்பியூட்டரினுல் தயாரிக்கப்பட்ட இக்கொடுப்பனவு தொடர்பான பெயர் விபரப் பட்டியலோடு விண்ணப்பங்களை ஒப்புநோக்கி மீள் பரிசீலனை செய்துள்ளார்கள்.

பண உதவி வழங்கப்படும் அடிப்படை வருமாறு: வளர்ந்தவர் ஒருவர் உயிரிழந்திருந்தால் ரூபா 25,000/= இத்தோடு அவருடன் தங்கியிருந்த பிள்ளை ஒன்றுக்கு ரூ 5,000/= வீதம் ஆகக்கூடியது நான்கு பிள்ளைகளுக்கு வழங்கப்படும். பராயமடைந்த ஒருவர் உயிரிழந்தால் ரூபா 15,000/= வழங்கப்படும். வயதுவந்தவர் ஒருவர் ஊனமுற்றிருந்தால் ஆகக்கூடிய தொகையாக ரூபா 25,000/= வழங்கப்படும். பராயமடையாதவருக்கு ஆகக்கூடிய தொகையாக ரூபா 10,000/= வழங்கப்படும்.

## பிரெஞ்சு மொழிபேசும் தீவுகளில் சர்வதேச மாநாடுகள்

பிரஞ்சு மொழி பயிலப்படும் இரு இந்து சமுத்திரத் தீவுகளான மொறிஷியஸ், றியூனியன் நாடுகளில், இவ்வாண்டு இறுதிப்பகுதியில் இரு சர்வதேச தமிழ் மகா நாடுகள் நடைபெறவுள்ளன.

மொறிஷியஸ் தீவில் எதிர்வரும் டிசம்பரில் ஏழாவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடும், நொவம்பரில் றியூனியன் தீவில் ஐந்தாவது உலகத் தமிழர் பண்பாட்டு மகாநாடும் நடைபெறும்.

பிரெஞ்சு மொழி வழங்கும் நாடொன்றில் ஓர் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடைபெறுவது இது இரண்டாவது தடவை. அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுத் தொடரில் முதல் மகாநாடு மலேசியாவில் கோலாலம்பூரிலும், இரண்டாவது மகாநாடு அறிஞர் அண்ணு ஆட்சிக் காலத்தில் சென்னையிலும் நடைபெற்றதைத் தொடர்ந்து மூன்ருவது அனைத்துலக மகாநாடு பிரெஞ்சு மொழி பேசும் சமுதாயத்தின் மையமான பிரான்சு நாட்டின் தலைநகர் பாரிஸ்சிலும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் ஏழாம் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு கூட்டப்படும் மொறிஷியஸ் தீவில் உலகத் தமிழர் பண்பாட்டுக் கழகம் ஏலவே தனது நான்காவது உலகத் தமிழர் பண்பாட்டு மகாநாட்டை சிறப்பாக நடாத்தியிருந்தது.

இத் தீவுகளில் நடைபெறவிருக்கும் மேற்படி இரு சர்வதேசத் தமிழ் மகாநாடுகளால் இங்குவாழும் தமிழர் மத்தியில் தமிழ் ஆர்வமும், புத்துணர்ச்சியும் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 22-9-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.